பக்கங்கள்: பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 08 புதன்கிழமை (22-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:178

### உள்ளூராட்சித் தேர்தலில் சமாதான முயற்சிக்கு அங்கீகாரம்

# ஐ.தே.கட்சிக்கு அமோக வெற்றி!

# 17 சபைகளில் 15ஐக் கைப்பற்றியது!

### கொழும்பு மாநகர சபையையும் தக்கவைத்து சாதனை

கொழும்பு,மே22

நேற்றுமுன்தினம் இரண்டாம் கட்டமாக 17 உள்ளூராட்சி சபைகளுக்கு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆமோக வெற்றியீட்டியது. மூன்று மாநகரசபைகளில் கொழும்பு உட்பட இரண்டு மாநகர சபைகளையும் தேர்தல் நடைபெற்ற 4 நகரசபைகளையும் பத்து பிரதேச சபைகளில் ஒன்பதையும் ஐ.தே.க. தனதாக்கிக் கொண்டது.

இது அரசின் சமாதான முயற்சிகளுக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் மக்கள் அளித்த அங்கீகாரம் என்றே கொள்ளப்படுகிறது.

17 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐ.தே.க. மொத்தம் 116 உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. பொ.ஐ. முன்னணிக்கு மொத்தம் 64 உறுப்பினர்கள், ஜே.வி.பிக்கு மொத்தம் 21 உறுப்பினர்கள்.

கொழும்பு, காலி மாநகரசபைகள், தங்காலை, பாணந்துறை, பேலியா

(10ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு,மே22

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைகளை இன்று நள்ளிரவு முதல் அதிகரிக்கின்றது.

இதன் பிரகாரம் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 2 ரூபாவினாலும்,

(10ஆம் பக்கம் பார்க்க)

# இயல்புநிலையை உருவாக்குவது பற்றி

# அரச பிரதிநிதிகளுடன் புலிகள் பேச்சு!

### தேர்தல் முடிவுகளின் எதிரொலி

## நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சிகள் குழப்பம்

### சபை இரு தடவைகள் ஒத்திவைப்பு

கொழும்பு,மே22

நாடாளுமன்றத்தில் நேற்று முற்பகல் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. பொ.ஐ.முன்னணியினரும், ஜே.வி.பியினரும் சபையில் கூச்சல் எழுப்பி அரசுக்கு எதிரான சுலோக அட்டைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் சபை நிகழ்ச்சிகள் தடைப்பட்டன.

சபையைக் கட்டுப்படுத்துவதில் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா பெரும் சிரமங்களுக்கு உள்ளானார். சபையில் அமைதியை நிலைநாட்ட முடியாமற்போகவே அவர் சபை நடவடிக்கைகளை இரு தடவைகள் இடைநிறுத்தி வைத்தார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் தலைமையில் கூடியது. வழமையான சபை நட

(02ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் பெற்றோர் நாடு திரும்ப விருப்பம்?

திருச்சி,மே22

தமிழ்நாட்டில் திருச்சியில் வசித்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் பெற்றோர் நாடுதிரும்பி வாழவிரும்புவதாக இந்திய இணையச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இலங்கையில் அமைதி திரும்புவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதால் தாங்கள் நாடு திரும்பவிரும்புவதாக அவர்கள் கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை, தாயார் பார்வதி அம்மையார் ஆகியோர் கடந்த 1990ஆம் ஆண்டுமுதல் தமிழ்நாட்டில் தங்கியுள்ளனர். தொடர்ந்து இந்தியாவில் தங்கி

(10ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிச் சேவையை சீராக்கும் பணி தொடர்கிறது!

யாழ்ப்பாணம்,மே22

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைபேசிச் சேவையை சீராக்குவதற்காக நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட பணிகள நேற்று நள்ளிரவுவரை தொடர்ந்து நடைபெற்றதாக ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

தொலைபேசிச் சேவையைச் சீராக்குவதற்காக இணைப்புக்களை அதிகரித்தல், மன்னார் ஊடான நுண் அலை தொடர்பைச் சீர்செய்தல் போன்ற பணிகள் யாழ். தொலைத்தொடர்பு கோபுரத்திலும் மன்னார் தொலைத் தொடர்பு கோபுரத்திலும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கொழும்பில் இருந்து வருகைதந்துள்ள விசேட நிபுணர் குழு இந்தப் பணியில் நேற்று நள்ளிரவுவரை ஈடுபட்டது.

பெரும்பாலும் சேவைகள் இன்று ஓரளவு சீராகும் என நம்பிக்கை வெளியிடப்பட்டது.

சேவைகள் சீரானதும் புதிய பரிவர்த்தனை நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## கிளிநொச்சியில் நேற்றுக்காலை இரு தரப்புகளும் முதல் சந்திப்பு

கிளிநொச்சி,மே22

**புரிந்துணர்வு உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்தி வடக்கு - கிழக்கில் பூரணமான இயல்புநிலையைத் தோற்றுவிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுப் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளும் நேற்று கிளிநொச்சியில் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர்.**

பிரதமரின் அலுவலகத்தில் செயற்படும் சமாதான நடவடிக்கைச் செயலணிக் குழுவின் பிரதிநிதிகள் மூவரே நோர்வேயின் பிரதித் தூதர் சகிதம் நேற்றுக்காலை திடீரென கிளிநொச்சிக்கு விரைந்து புலிகளோடு பேச்சு நடத்தினர்.

கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் காலை 9.45மணிமுதல் இரு கட்டங்களாக சுமார் மூன்று மணிநேரம் இந்தப் பேசசுக்கள் நீடித்தன.

விமானப் படையின் விசேட ஹெலி மூலம் நேற்றுக்காலை 8.45மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் வந்திறங்கிய சமாதான நடவடிக்கை செயலணியினரை விடு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சின் விவரம் பிரதமருக்கு உடன் தெரிவிப்பு!

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் நேற்று நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை சமாதான நடவடிக்கை செயலணியினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விளக்கியுள்ளனர்.

நேற்று மாலை 5 மணிக்கு கொழும்பு வந்தடைந்த செயலணியின் செயலாளர் பேர்னாட் குணதிலக உடனடியாகவே பிரதமரைச் சந்தித்தார்.

புரிந்துணர்வு உடன்பாட்டை அமுல செய்வதில் உள்ள தாமதம் குறித்து விடுதலைப் புலிகள் விசனம் தெரிவித்தனர் என்றும் -

அவர்கள் அதிருப்தியுற்றநிலையில் இருப்பதைத் தம்மால் உணரமுடிந்தது என்றும் -

பேர்னாட் குணதிலக பிரதமரிடம் எடுத்துக்கூறியதாக அறியவந்தது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் அரச போக்குவரத்துச் சேவையை ஆரம்பிப்பது குறித்தும் நேற்று கருத்துப் பரிமாறப்பட்டது என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்களுககு முன்னதாக புலிகள் பிரதிநிதிகள் குழு, அரச பிரதிநிதிகள் குழுவைச் சந்தித்திருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் என்று ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

(ஐ-3-9)

### மட்டக்களப்பில் மீனவர் மூவரை காணவில்லை

மட்டக்களப்பு,மே22

மட்டக்களப்பு வாகரைக்கடலில் கடந்த சனிக்கிழமை இரவு மீன்பிடிககச் சென்ற மூன்று மீனவர்கள் நேற்றுவரை கரைதிரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்கள் வெள்ளியன்று சுகவீன லீவுப் போராட்டம்

யாழ்ப்பாணம்,மே22

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் முப்பது அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை மறுதினம் அடையாள தொழிற்சங்க நடவடிக்கையாக வடக்கு - கிழக்குப் பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் ஒரு நாள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவிருக்கின்றனர்.

அன்று காலை ஆசிரியர்கள் தமது லீவு விண்ணப்பத்தை அதிபர்களிடமும் -

அதிபர்கள் லீவு விண்ணப்பத்தை கோட்டக் கல்வி அதிகாரிகளிடமும் - கையளித்துவிட்டு போராட்டத்தில் இணையுமாறு சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார்.

ஆசிரியர்கள் தரப்பில் முன்வைத்

(02ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர் போராட்டத்தை ஆதரித்து பல்கலைக்கழக ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே22

பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்ற வேண்டுமென்று கோரி பாடசாலை மாணவர்கள் நாளை மேற்கொள்ளவிருக்கும் எதிர்ப்பு நடவடிக்கைக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்து தொண்ணூறு நாள்களாகின்றன. ஸ்ரீ லங்கா அரசுத் தரப்பு நிறைவேற்ற வேண்டிய பல கடமைப்பாடுகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதற்காக இந்தக் கடமைப்பாடுகளை நிறைவேற்றுவதில் அரச இராணுவத் தரப்பில் இன்னமும் தயக்கமே நிலவுகின்றது.

தமிழர் தாயகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் அரச படையினர் ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ளனர். தமிழ் மக்களின் தாயகத்தை ஆக்கிரமிக்கவும் தமிழரின் கல்வி வளத்தைச் சீரழிக்கவும் முனைந்து நிற்கும் பேரினவாதம், தனது இந்நடவடிக்கையைக் கைவிட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும்கூடத் தயாராகவில்லை. இவ்வாறாக ஒப்பந்தத்தில் உள்ள மேலும் பல கடமைப்பாடுகளை அரசு புறக்கணித்து வருகின்றது. சமாதானத்திற்கான வாய்ப்புக்களை சீர்குலைக்கும் நோக்குடன்தான் படையினர் இந்த வகையில் செயற்படுகின்றனரா எனச் சந்தேகம் ஏற்படுகின்றது.

நாளைய தினம் குடாநாட்டின் பாடசாலை மாணவர்கள், ஆக்கிரமிப்பிலுள்ள பாடசாலைகளிலிருந்து வெளியேறி சுமுகமான கல்விச் செயற்பாட்டிற்கு உதவுமாறு கோரி நடத்தவுள்ள எதிர்ப்பு நடவடிக்கைக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது முழுமையான ஆதரவினை வழங்குகின்றது. இவ்வகையான தமிழ் மக்களின் தொடர் எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஆரம்பமே இது என்பதனை அரசு புரிந்துகொள்ள வேண்டும். இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்த பின்னிற்பதானது எந்த வகையிலும் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த உதவமாட்டாது - என்று உள்ளது. (ஐ)

## யுத்தநிறுத்தம் தந்த பரிசு; 1,500 பேர் உயிர்தப்பினர்!

யுத்தநிறுத்தம் காரணமாக சுமார் 1,500 உயிர்கள் பலியாவதிலிருந்து காப்பாற்ற முடிந்தது எனத் தேசிய சமாதான சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக சராசரியாக நாளொன்றுக்கு 10 மனித உயிர்கள் பலியாகின. ஆனால், கடந்த டிசெம்பர் 24ஆம் திகதியில் இருந்து நடைமுறையில் இருந்துவரும் யுத்தநிறுத்தம் காரணமாக சுமார் 1,500 உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது எனத் தேசிய சமாதான சபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானம் தொடர்பான நம்பிக்கை மக்களிடையே உருவாக்கப்படுவது இன்றியமையாதது எனவும் இவ்வாறு உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளமை, அந்த நம்பிக்கையை வளர்க்க ஏதுவாக அமையும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## காயத்திரி பீட பீடாதிபதி யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,மே22

ஸ்ரீ காயத்திரி காம கோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினையால் இந்தியாவின் நிலைப்பாடு, புலிகள் மீதான இந்தியத் தடை மற்றும் தனித் தமிழீழம் போன்றவை தொடர்பாகப் பல கருத்துக்களை வெளியிட்டமையினால் இந்தியாவில் சர்ச்சைக்குரிய ஒருவராகக் கருதப்பட்டு வரும் இந்த சுவாமி கடந்த 14ஆம் திகதி கொழும்புக்கு வருகை தந்திருந்தார்.

எந்தவித மத வேறுபாடுகளுமின்றி சேவையாற்றிவரும் சுவாமி ஸ்ரீ. ராஜ்குமார், பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பொருட்டு தற்போது யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் தோறும் சென்று ஒழுக்கநெறிகளைப் போதித்தல் மற்றும் அது தொடர்பான பயிற்சிகளை வழங்குதல், முதியோர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கான இல்லங்களை அமைத்தல், சமூக விரோத செயற்பாடுகளான ஆபாசப்படம், கசிப்பு போன்றவற்றை ஒழித்தல் ஆகிய செயற்பாடுகளில் இவர் ஈடுபடவுள்ளார்.

அத்துடன், தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் சகல வழிபாட்டிடங்களிலிருந்தும் ஆயுததாரிகளை வெளியேற்றுவதற்காக இளைஞர்களைத் திரட்டி ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபடப்போவதாகத் தெரிவிக்கும் இவர் -

எந்த மத ஆலயங்களும் ஆக்கிரமிக்கப்படுவதையோ, அழிக்கப்படுவதையோ அனுமதிக்கமுடியாது என்றும் கூறுகிறார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியிடம் சென்று தனது நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்ட சுவாமி, எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தனது முதல் ஒழுக்கநெறி தொடர்பான பிரசாரத்தை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நிகழ்த்தவுள்ளதாக சொன்னார்.

'பிரம்மஞானி', 'இலங்கை முனி' போன்ற பட்டங்களைப் பெற்ற இவர் தற்போது பண்டத்தரிப்பில் தங்கியுள்ளார். இவரது பீடத்தின் இலங்கைக்கான கிளையொன்றை சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் தமது சொந்த இடமான மீசாலைப் பகுதியில் திறந்து வைக்க இருக்கிறார். (க-9)

## அம்பாறையில் நாளை டாக்டர்கள் அடையாள வேலை நிறுத்தம்

### ஆபத்துக்காலப் படி வழங்காததற்கு ஆட்சேபம்

கொழும்பு,மே22

வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் அரசாங்க மருத்துவர்களுக்கு ஆபத்துக்காலப்படி வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளாததை ஆட்சேபித்து தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அம்பாறை மாவட்டக் கிளை தனது ஆட்சேபத்தைத தெரிவிக்க அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதெனத் தீர்மானித்திருக்கிறது.

இதன்படி நாளை அம்பாறை வைத்தியசாலை உட்பட மாவட்டத்தின் பல வைத்தியசாலைகளில் அடையாள வேலை நிறுத்தம் நடைபெறுமென்று அம்பாறைக் கிளையின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

இரண்டு வாரங்களுக்குள் தீர்வு கிடைக்காவிடின் வடக்கு - கிழக்கிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (ம)

## ஆசிரியர்கள் வெள்ளியன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள சில கோரிக்கைகள் வருமாறு:-

★ மத்திய அரசின் நிதியிலிருநது மூவாயிரம் ஆசிரிய நியமனங்களை உடன் வழங்குக -

★ ஆசிரிய சம்பள நிலுவைக்காக ரூபா 35கோடியை உடன் வழங்குக -

★ படையினர் வசமுள்ள பாடசாலைகளை கல்விக்காக உடன் மீளவும் ஒப்படைக்குக -

★ சமாதானத்தை நாடு விரைவில் அடைய தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை உடன்நீக்கி பேச்சுகளை ஆரம்பிக்குக -

★ ஆசிரிய பதவி உயர்வு தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை (பயிலுநர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கல்/50வயது எல்லையை நீக்கல்/30.12.2000 முடிவு திகதியை நீடித்தல் உட்பட) உடன் அமுல்படுத்துக -

★ கல்விச் சேவை ஆணைக்குழுவே ஆசிரியர், அதிபர், இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆகியவற்றின் நியமனங்கள், பதவி உயர்வுகள் ஆகியவற்றில் இனவாதப் போக்கைக் கைவிட்டு தமிழர்கள், முஸ்லிம்களுக்கு நீதி வழங்கு -

★ வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள அதிபர்கள், சிங்கள ஆசிரியர்கள், சிங்கள சிற்றூழியர்களை நியமித்து தமிழ்ப் பாடசாலைகளைச் சிங்களமயமாக்கவேண்டாம் -

★ வெளிநாட்டு புலமைப் பரிசில்களில் தமிழ், முஸ்லிம்களுக்குப் பாரபட்சம் காட்டாதே! (ஐ-3)

## நாடாளுமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகளை அடுத்து வாய்மூல வினாக்களுக்கு அமைச்சர்கள் பதில அளித்தனர்.

அதைத் தொடர்ந்து ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிட்டபடி இலங்கை முதலீட்டுச்சபை திருத்தச் சட்டமூலத்தை இரண்டாவது மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கும்படி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சபாநாயகர் கேட்டுக் கொண்டார்.

அச்சமயம் ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ எம்.பி., நேற்றுமுன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இடம்பெற்ற அரசியல் வன்முறைகள், அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க எழுந்து நின்றார்.

இச்செயல் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு முரணானது. விமல் வீரவன்ஸவைப் பேச அனுமதிக்கக் கூடாது என்று ஆளும் கட்சியினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினர்.

நாடாளுமன்றம் கூடுவதற்கு முன விமல் வீரவன்ஸ என்னை எனது அலுவலகத்தில் சந்தித்து அனுமதி கேட்டிருந்தால் அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கும். ஆனால், ஜே.வி.பி. உறுப்பினர் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டார். எனவே அவர் பேசுவதற்கு இடமளிக்க முடியாது எனக் கூறிய சபாநாயகர் சட்டமூலத்தைச் சமர்ப்பிக்கும்படி அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் பீரிஸ் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்த அதேவேளை ஜே.வி.பியினரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் எழுந்து நின்று அரசுக்கு எதிரான சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கூச்சலிட்டனர்.

"ரணில் சர்வாதிகாரம் ஒழிக", "இதுதான் ரணிலின் ஜனநாயகமா?", "முறைகேடான கள்ளத் தேர்தலை ரத்துச்செய்!" என்ற சுலோகங்கள் அவற்றில் எழுதப்பட்டிருந்தன.

சபையில் அமைதியை ஏற்படுத்த முடியாது போகவே, சபாநாயகர் 10.25 மணிக்கு சபையை 15நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

சபை மீண்டும் கூடியபோது ஜே.வி.பியினரும் பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் மீண்டும் எழுந்துநின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சபாநாயகர் எதிர்க்கட்சியினரைப் பலமுறை கண்டித்தும் அவர்கள் சபாநாயகரின் கட்டளைக்கு செவிமடுக்கவில்லை. இதனால் சபை 10.45 மணிக்கு மீண்டும் இடைநிறுத்தப்பட்டது.

கட்சித் தலைவர்களைத் தனது அலுவலகத்திற்கு அழைத்துப்பேசிய சபாநாயகர் பின்னர் சபையை மீண்டும் கூட்டினார்.

ஜே.வி.பியின் நோக்கம் தொடர்பாக பிறிதொருதினத்தில் விசாரிக்க இணக்கம் காணப்பட்டிருப்பதாக சபாநாயகர் அறிவித்தார். அதன்பின் சபை நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றன. (ம)

## பிரிட்டிஷ் உயர் அதிகாரி இன்று மட்டுநகர் விஜயம்

பிரிட்டிஷ் வெளிவிவகார பொது நலவாய அலுவலக ஆசிய பசுபிக் பிரிவுப் பணிப்பாளர் கலாநிதி ஸ்தஸலின் மன்ஸ்டன் இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார்.

இவருடன் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் திருமதி லிண்டா பீல்ட், பிரதித் தூதுவர் பீட்டர் ஹக்கின், தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் மார்க் வெல்டன், [illegible] தொடர்புத்துறை அதிகாரி மகேந்திரா ரத்னவிர, இரண்டாவது செயலாளர் மார்க் பெர்னாண்ட்ஸ் ஆகியோரும் உடன் வருகின்றனர்.

இவர்கள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், காத்தான்குடி முஸ்லிம் பிரதிநிதிகள், போர் நிறுத்தக் கணகாணிப்புக் குழுப் பிரதிநிதிகள், வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து மாவட்ட நிலைமை பற்றி கலந்துரையாடவுள்ளனர். (ம)

## வன்னி கூ. சங்கங்களை இணைப்பது பற்றிய கூட்டம்

அரியாலை,மே22

கடந்த 1995ஆம் ஆண்டில் இருந்து வன்னியில் இயங்கிவரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் மீண்டும் அதே சங்கங்களுடன் இணைப்பது தொடர்பாக இன்று புதன்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறும் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மேற்படி ஏழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்கள் கிளிநொச்சிக்கு அழைக்கப்பட்டு இது குறித்து ஏற்கனவே ஆராயப்பட்டது குறிப்பிடத்தக்கது.(ஐ-17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிரத்தினம் ஆசைரத்தினம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் யாழ். பருத்தித்துறை வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிரத்தினம் ஆசைரத்தினம் அவர்கள் நேற்று (21.05.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியமணி நா.தம்பிரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா (ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரியும், கலாரஜனி ஜெயரட்ணம், காந்தினி ஜெகான் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஜெயரட்ணம் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, 2ஆவது கிளை), ஜெகான் (உரிமையாளர், சுலைமான் கண்டு & பிறதேர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜயந்தன், ஜயந்திரன், விஜயபாரதி, ரஞ்சினி, சிறாஜ், சம்சுனா, இக்பால், சர்மிளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஜனனி, நவீனா, அஸ்வினி, ஜெயவீணா, ஜெனி, செரீன், சுவப்னா, சமீரா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2002) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கலாரஜனி ஜெயரட்ணம் (மகள்)

*66/2,பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(4015)

### திருமதி இராசையா பத்மாசனி

59,**A.V.Road**, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பத்மாசனி நேற்று (21.05.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கிளரிக்கல் முத்தையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற கமலாசனி கனகசிங்கம், டாக்டர் சதானந்தன், செல்வி நீலோசனி முத்தையா (இளைப்பாறிய ஆசிரியை), வனசாட்சி தேவதாசன், செல்வி தவமணி முத்தையா, கணக்காளர் யோகானந்தன், **Dr**.கணேசானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி பத்மினி சுந்தரலிங்கம், யோகேஸ்வரன், திருமதி சாவித்திரி சிவபாதசிங்கம் (குணம்), திருமதி சுகுணா வள்ளுவன், திருமதி செல்வினி சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம், சிவபாதசிங்கம், வள்ளுவன், சகுந்தலா, சிவலிங்கம், திருமதி குணவதி பாமதேவன், திருமதி மகேஸ்வரி தருமலிங்கம், காலஞ்சென்ற திருமதி லீலாவதி வேதநாயகம் ஆகியோரின் மாமியாரும் சுப்ரமணியம் நடராசாவின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.விமலராஜா (விமலா) (மருமகன்)

***59,A.V.Road,***
*அரியாலை.*

(4014)

### வல்லிபுரம் செல்வரத்தினம்

(இளைப்பாறிய கால்நடை வைத்திய அலுவலர்)

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம் செல்வரத்தினம் நேற்று (21.05.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அன்னலட்சுமி (தாதிய உத்தியோகத்தர், கோப்பாய், சாவகச்சேரி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கிருஷ்ணமூர்த்தி (U.K), கிருஷ்ணசாந்தி (ஜேர்மனி), முரளிகிருஷ்ணா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சசிகரி, சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜோகிதா, மர்த்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தவரட்ணம் (மலேசியா), இராசரத்தினம் (கொழும்பு), இராசதுரை மற்றும் குணரட்ணம் (மலேசியா), அற்புததேவி (ஊரெழு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவசம்பு, சுப்பிரமணியம், மகேஸ்வரி, தவமணி, அன்னலட்சுமி, பாலச்சந்திரன் (இளைப்பாறிய ஆசிரியர்), கனகமணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2002) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (ஊரெழு) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி வ.செல்வரத்தினம், பா.குமரேந்திரன்.

*ஊரெழு - கிழக்கு.*
*சுன்னாகம்.*

(4022)

கல்வியங்காடு

**ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி தேவஸ்தானம்**

## மணவாளக்கோலவிழா விஞ்ஞாபனம்

இன்று (22.05.2002) புதன்கிழமை காலை 8 மணிக்கு பஞ்சகுண்டபக்ஷ நவோத்திர சதசங்காபிஷேகம் (1008) பரிவார மூர்த்திகளுக்கு சபனகலஷ அபிஷேகம் நடைபெறும். மாலை 4.30 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி பூத்தண்டிகையில் உலாவருதல் நடைபெறும்.

பிரதமகுரு: வேதாகம தத்துவநிதி ...கம சிரோன்மணி பிரம்மஸ்ரீ பொன்.வரதராஜக் குருக்கள்.

*பரிபாலன சபையும், விழா உபயகாரர்களும்.*

(C/22215)


## ஊடகவியலாளர் பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி,மே22

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை எதிர் வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பயிற்சிப்பட்டறை ஜூன் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த 75ஊடகவியலாளர்கள் பயிற்சி பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)


## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. சண்முகநாதசர்மா ஸ்ரீதரன்**

(இலங்கை வங்கி,
யாழ். 2ஆம் கிளை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று வருட காலமாக எம்முடன் கடமையாற்றி 31.01.2002 அன்று வங்கிச் சேவையிலிருந்து இளைப்பாறிய இவருக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

"வாழிய வாழிய பல்லாண்டு
வளமுடன் வாழ வாழ்த்துவமே!
பாருலகில் சீராளன் ஸ்ரீதரன்
அவன் தன் குடும்பமும் வாழ வாழ்த்துவமே!
நல்லைக் கந்தன் நல்லருள் பெற்று
நலமெலாம் பெறவென வாழ்த்துவமே!
தொல்லுலகில் நீவிர ஆனந்த வாழ்வு
பெற்றுய்ய ஊழியர் நாம் வாழ்த்துவமே!"

இலங்கை வங்கி,
2ஆம் கிளை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

(C/22216)



## தேவை

*இணுவிலில் கே.கே.எஸ். வீதியில் இயங்கிவரும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற் சாலைக்கு, வெட்டுவதற்கும் தைப்பதற்கும் தைப்பதற்கும் பெண்பிள்ளைகள் தேவை.*

**ஜூன் 5ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.**

**விளம்பர இல. 1523,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.** (3992)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை**

## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்

**கல்வியாண்டு 2001/2002**

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவரிடம் இருந்து 05.07.2002 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. முதலாம் வருடம்
2. இரண்டாம் வருடம் பகுதி I
3. மூன்றாம் வருடம் பகுதி II
} இரண்டாம் அரையாண்டு

4. நான்காம் வருடம் பகுதி III ஆண்டுப் பரீட்சை

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பற்றுச்சீட்டினைப் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல வேண்டும். விண்ணப்பப் படிவங்களை 28.05.2002ஆம் திகதிமுதல் முகாமைத்துவக கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**பதிவாளர்.** (C/22212)



## Walk in Interview

***Post of Ticketing/Carrier Agents***

- Graduates of either sex between the ages 24-30.
- Computer literacy is definitely an advantage.
- Knowledge of English is not compulsory but advantageous.
- Call in between 9 a.m. to 11 a.m. today - 22nd May 2002.

**Aitken Spence Group
Union Assurance Building,
139, Stanley Road,
Jaffna.**

(3981)



## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி
சறோஜினி ஸ்ரீசோமசேகரம்**

(இலங்கை வங்கி,
யாழ்.2ஆம் கிளை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

கடந்த பன்னிரண்டு வருட காலமாக எம்முடன் கடமையாற்ற 18.04.2002 அன்று வங்கிச் சேவையிலிருந்து இளைப்பாறிய இவருக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

*'வங்கிதனை நீர் வரித்து வளமான வாழ்வு கண்டீர்!
இங்கிதமாய் நீர் இங்கு செய்திட்ட சேவைதனை
என்றென்றும் நாம் மறவோம், நலம் பல பெற்றிட்டு
குன்றுடையான் அருள்பெறுக "சறோஜினி" அம்மா நீ!'*

இலங்கை வங்கி,
2ஆம் கிளை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

(சி-22217)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தர்மதாசன் செந்தில்வதனி (வதனி)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி, நுணாவிலைப் புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி தர்மதாசன் செந்தில்வதனி அவர்கள் 18-05-2002 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தங்கராசா (கட்டையப்பா) - இரத்தினேஸ்வரி (கனடா) தம்பதிகளின் அன்பு மகளும் தர்மதாசன் (சிறி) அவர்களின் அன்பு மனைவியும் வதனதாஸின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் நாகம்மாவின் அன்புப் பேர்த்தியும் செந்தில்நாதன் (கனடா), செந்தில்செல்வி (கனடா) செந்தில்மலர் (கனடா), செந்தில்செல்வன் (கனடா), செந்தில்குமணன் (கனடா), செந்தில்குமரன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் கதிர்காமநாதன், இன்பநாதன், புகனேஸ்வரி, றோசா ஆகியோரின் அன்பு மருமகளும் சிவஞானரத்தினம் (சிவம்), இராஜேஸ்வரி செல்வராசா பரமேஸ்வரி (பட்டிருப்பு, களுவாச்சிகுடி) செல்வராசா சிவனேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் உதயகுமார், சுரேஷ் (கனடா), ரோகினி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் சயிற்றா, பவிற்றா, பூஷணன், றொசான், றோயன் ஆகியோரின் சித்தியும் திருக்குமரன், செல்வி, திலீபனா, இளங்குமரன் ஆகியோரின் மைத்துனியும் தினேஸ், தர்சி, பிரியா, நந்தன், பிரதீப், விநோத், கமல், மதுரா, செந்தூரா, சறணியா, சிந்துஜா, சியந்தா ஆகியோரின் அன்புத் தமக்கையாரும் திருமதி தளையசிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும் (நுணாவில்) காலஞ்சென்ற சிவமலர், செல்வி, சிவா, சின்ராஸ் ஆகியோரின் அன்பு அண்ணியும் அமிர்தாவின் மைத்துனியும் ஆரூண், ஆரணி ஆகியோரின் மாமியாரும் டர்சன், டர்சிகா, டினோ, சுவன்யா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கட்டுவன் மேற்கு,
முனியப்பர் கோயிலடி,
ஏழாலை.

(3989)

தகவல்:
தர்மதாசன் (சிறி)
(கணவர் - நுணாவில்)

## திருமதி றூபி (ஜெயம்) பிரான்சிஸ் சேவியர்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றூபி பி.சேவியர் 16.05.2002 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் டி.பி. பிரான்சிஸ் சேவியரின் அன்பு மனைவியும் பாவேந்தன் யூலியானா (ஆஸ்திரேலியா), புளோறன்ஸ் (லண்டன்), மெனிற்றா(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிளறன்ஸ்சவரிமுத்து, றெக்ஸ்றஞ்சித் நாயகம், ஜெராட் அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மாமியும், D.C. அலோசியஸ், கேட்றூட், அன்ரன்லெற்றிசியா, மேபிள் ஆகியோரின் அருமைச்சகோதரியும், காலஞ்சென்ற திரு.திருமதி டொமிங்குப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளுமாவார்.

இவரின் பூதவுடல் இன்று (22.05.2002) புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு மஹிந்த மலர்ச்சாலை காலி வீதி கல்கிந்தையிலிருந்து புனித மரியாள் சேமக்காலை சென். றீற்றாஸ் றோட் ரத்மலானைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
டி.பி. பிரான்சிஸ் சேவியர்
61/2, சென்.றீற்றாஸ் றோட், ரத்மலானை.

(3990)

## திருமதி விஜயலக்ஷ்மி பரராஜசேகரம்

நவாலி கிழக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி விஜயலக்ஷ்மி பரராஜசேகரம் அவர்கள் 21-05-2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் க.பரராஜசேகரத்தின் அன்பு மனைவியும் ப.நந்தீஸ் (T.O), ப.அனுஷாநந்தி (HNDA Final) அவர்களின் அன்புத் தாயாரும் ஐ.ராஜசிங்கம், கு.கமலாதேவி (கனடா), ஐ.யோகரட்ணம் காலஞ்சென்ற ந.இந்திராணி மற்றும் திருமதி க.செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் க.புனனேஸ்வரி, க.செல்வநாயகம் (கனடா), ரா.சிவகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21-05-2002) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(3986)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.


## மயக்கமா.....? தயக்கமா......? மனதிலே..... குழப்பமா ?

**உங்கள் கட்டடங்கள் சம்பந்தமான சகல பிரச்சினைகளையும் பொறுப்புணர்வுடன் செய்து தீர்ப்பதற்குக் காத்திருக்கிறோம்.**

- மீள் புனரமைப்புக்கான அதிகாரபூர்வ மதிப்பீடு சமர்ப்பித்தல்.
- சகலவித வசதிகளுடனும் தேவைகளுக்கேற்ப மீள் அமைத்தல்.
- நிதிப்பாய்ச்சலுக்கேற்ப மீள் புனரமைப்பினைத் திட்டமிடல்.
- பயன்தரும் முதலீட்டுத் திட்டங்களுக்கான ஆலோசனைகளையும் ஆவணங்களையும் வழங்குதல்.
- தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், சைவாலயங்கள் போன்றவற்றை விதிமுறைகளுக்கேற்ப புனரமைப்புச் செய்தல்.
- விசேட தரம் பெற்ற திருத்த வேலைகள் செய்தல்.

கண்ணைக் கவரும் விதத்தில் உரிய படங்களுடன் சாதாரண குடிமகனும் விளங்கிக்கொள்ளும் வகையில் சேவைகள் அளிக்கப்படும்.

*உயர் தொழில்நுட்ப வசதிகளும் தளபாடங்களும் எம்மிடம் உண்டு.*

# ரூலின்ஸ்

"விமலம்", 6, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(3979)

# அட! அப்பாடியா!!

தயாரிப்பு: கனிமொழி

## 'பின்னழகுப்' போட்டி

முதலில் உலக அளவில் அழகிப் போட்டிகள் நடத்தினார்கள். பின்னர் கண்டதற்கெல்லாம் அழகிப் போட்டிகள் நடத்தினார்கள். இப்போது மனிதனை ஷபாட்ஸ்;, ஷபாட்ஸ்; ஆக்கி அதில் அழகுப் போட்டிகள் நடத்துகிறார்கள்.

என்ன என்கிறீர்களா? கண் அழகு, முக அழகு, தலைமுடி அழகு, கால் அழகு என்று உடம்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் போட்டி நடத்துகிறார்கள். பிரிட்டனின் நைட்ஸ் பிரிட்ஜ் நகரில் இப்படி ஒரு போட்டி நடந்தது. அற்புதமான போட்டி என்று லண்டன் முழுவதும் ஒரே பேச்சு. போட்டி இதுதான்! 'பின்னழகுப்' போட்டி!!





ஏராளமான ஆண், பெண்கள் இந்தப் 'பின்னழகுப்' போட்டியில் பங்குபற்றினர். 16 வயதான சார்லோட்டே சர்ச் என்ற நங்கை உலகப் 'பின்னழகி'யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேபோட்டியில் சிறந்த ஷபின்னழகனாக ஸ்காட் ரைட் என்ற இளம் நடிகர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஏன் இந்தப் போட்டி நடத்தினீர்கள்? விளக்குகிறார் அமைப்பாளர். "தொடர்ந்து ரீ.வி. பார்ப்பது, கணனி முன்பாக பல மணி நேரம் தொடர்ந்து அமர்ந்திருப்பது என் பவற்றால் இன்றைய இளைஞர்களின் உடல் அழகு கச்சிதமாக இருப்பதில்லை. இதுபோன்ற போட்டிகளை நடத்துவதன் மூலம் தமது உடலைக் கச்சிதமாக வைத்திருப்பதற்கு ஊக்கமளிக்கமுடியும்"

ஆகா! என்ன உன்னதமான நோக்கம் பாருங்கள்!!

## 'செக்வே' ஸ்கூட்டர்



சிறுவயதில் தள்ளுவண்டியில் ஒரு காலை வைத்தபடி எகிறி எகிறிக் குதித்து ஓடியது ஞாபகத்துக்கு வருகிறதா? படத்தில் இருப்பதும் சில்லுப் பூட்டிய அப்படிப்பட்ட ஒரு விளையாட்டுப் பொருள் என்று நீங்கள் நினைத்தால், அதற்காக நாங்கள் வருத்தப்பட மட்டும்தான் முடியும்.

உண்மையில் இது ஒரு நவீன ஸ்கூட்டர். என்ன! காதில் பூச்சுற்றுகிறார்கள் என்று நினைக்கிறீர்களா? அப்படியில்லை உண்மையாகவே இது ஒரு ஸ்கூட்டர். இதன் பெயர் 'செக்வே ஸ்கூட்டர்'. பிரிட்டனைச் சேர்ந்த டீன் காமென் என்பவர் கடந்த ஆண்டு மே மாதம் இதனை உருவாக்கி வெள்ளோட்டம் விட்டார். இப்போது இது சந்தைக்கு வந்துள்ளது.

இரு சில்லுகள், அவற்றை இணைத்தபடி மேல்நோக்கி வளர்ந்துள்ள ஒரு தண்டு போன்ற 'பார்' (Bar), அதில் பொருத்தப்பட்ட கைப்பிடி, கீழே சில்லுகளுக்கு இடையில் ஒருவர் நின்று கொண்டு பயணிக்கக் கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ள மிதிபலகை அத்துடன் இணைக்கப்பட்டுள்ள இலகுவான மோட்டார் சாதனங்கள். இவைதான் இந்த ஸ்கூட்டரின் மொத்த உருவம்.



ஜாலியாக நின்றபடி சுமார் 12 மைல் வேகத்தில் இதில் பயணிக்க முடியும். "நீங்கள் நின்றபடி ஒரு இராஜகுமாரன் போன்று மற்றவர்களை அவதானித்தபடி - அவர்களும் உங்களைக் கண்கொட்டாமல் பார்ப்பார்கள் - இராஜபயணம் ஒன்றை அனுபவிக்கலாம்" என்கிறார் இதனை உருவாக்கிய காமென்.

வயோதிபர்கள் மத்தியில் இதற்கு ஏகப்பட்ட வரவேற்பாம்.

## 103 வயதுக் கிளி

உலகில் மனிதர்களின் சராசரி வயது தற்போது அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. யப்பானில் 100 வயது தாண்டியவர்களின் எண்ணிக்கையே செஞ்சரி, டபிள் செஞ்சரி என்று போய்க் கொண்டிருக்கிறது.



இங்கே லண்டனில் மனிதர்களுக்குப் போட்டியாக ஒரு கிளி 103 வயது வரை வாழ்ந்து சாதனை படைத்துள்ளது. ஆஸ்திரேலியாவின் 'மகாவ்' என்ற இனக் கிளியே இந்தச் சாதனைக்குரியது. இதன் பெயர் சார்லி.

1899ஆம் ஆண்டில் இந்தக் கிளி பிறந்துள்ளது. தற்போது பீற்றர் ஓரம் என்பவர் இதனை வளர்த்து வருகிறார். முதலில் இந்தக் கிளியை ஸ்டிரீபிலிங் என்ற பெண் 1899இல் வாங்கி வளர்த்தார். பின்னர் 1936இல் பொஸி டிராப்னர் என்பவரிடம் இதுபோய்ச் சேர்ந்தது.

1937இல் இந்தக் கிளியை பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் வாங்கி வளர்த்தார். அப்போது அவர் இந்தக் கிளிக்கு நன்றாகப் பேசவும் கற்றுக்கொடுத்தார். அவர் தற்போது இறந்துவிட்டார். ஆனால், கிளி இன்னும் உயிரோடு இருக்கிறது.

தற்போது கிளி பொஸி டிராப்னரின் மருமகனான பீற்றர் ஓரத்திடம் இருக்கிறது; நல்ல ஆரோக்கியத்துடன்

## மொட்டைத் தலையா? இனி இல்லை கவலை



தலைமயிர் அதிகம் உதிர்கிறது. விரைவிலேயே மொட்டைத் தலையாகிவிடுமே என்று அஞ்சுகிறீர்களா? கவலையை விடுங்கள். வயதான பின்னர் தலை மொட்டையானால் நமது இளமைக் காலத் தலைமுடியை மீண்டும் பெற வசதி ஏற்பட்டுவிட்டது.

எப்படி?


இளம் வயதில் எமது தலைமயிரை சிறிதளவை எடுத்து அவற்றை தனியாக விசேட ஆய்வுகூடத்தில் வளர்த்துப் பெருக்கமுடியுமாம் (கீரைப் பாத்தி மாதிரி). அவ்வாறு செயற்கை முறையில் வளர்த்த தலைமயிரை தலையின் எப்பகுதியில் மொட்டை விழுந்துள்ளதோ அங்கு சிறிய சத்திரசிகிச்சைமூலம் பொருத்திக் (நட்டுக்) கொள்ளலாம்.

- இவ்வாறு தலை மயிர் பயிரிடும் முறையை 'ஹேரோ ஜெனிக்ஸ்' என்று அழைக்கிறார்கள். அமெரிக்காவின் கலி போர்னியாவில் இதனைத் தொழில் ரீதியாகச் செய்துவரும் மைக் பிளேக் இவ்வாறு சொல்கிறார். "இந்த முறையில், நிலத்துக்கு அடியில் உள்ள பாதுகாப்பான அறையில் கட்டுப்படுத்தக்கூடிய காலநிலையில் தலைமயிர் வளர்க்கப்படுகிறது. இன்றைய இளைஞர் கள் பலருக்குத் தலைமயிர் உதிர்வு ஒரு பெரிய பிரச்சினை. எனவே இந்த 'ஹேரோ ஜெனிக்ஸ்' தலைமயிர் வளர்ப்பு முறைக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கிறது. இதற்கான எனது நிறுவனம் இன்னமும் அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கவில்லை. ஆனால், அதற்குள் 200 பேர் என்னிடம் முன்பதிவு செய்துள்ளனர்" - என்கிறார்.

எதிர்காலத்தில் இரத்த வங்கி, கண் வங்கி என்பது போன்ற இந்த மயிர் வங்கியும் (சொல்ல ஒரு மாதிரியாக இருக்கிறதா அப்போ முடி வங்கி என்று சொல்லிக்கொள்ளுங்களேன்) விரைவில் உலகம் முழுவதும் தோன்றிவிடும்.

## களி மண்ணில் கலை வண்ணம்


"......கல்லிலே கலைவண்ணம் கண்டார்...." என்று பாடியிருக்கிறார்கள். இங்கே ஒருவர் களி மண்ணிலே கலை வண்ணம் காட்டுகிறார்.



தமிழகம் மானா மதுரையில் மட்பாண்டத்தொழில் செய்துவருபவர் சந்திரசேகர் அது மட்டுமன்றி வெறும் களிமண்ணில் வியத்தகு பொம்மைகளையும் அவர் படைக்கிறார்.

சிங்கம் ஜல்லிக் கட்டுக்காளை, ஆபிரகாம்லிங்கன் என்று இவரது கற்பனையில் உருவான களிமண் பொம்மைகள் பலப்பல. அவற்றுள் சில இங்கே.

## உங்கள் சொற்படி கேட்க ஒரு 'நாய்' வேண்டுமா?



மனிதனையே மனிதன் நம்ப மறுக்கும் காலம் இது. அதனால் தானோ என்னவோ மனிதன் மற்றொரு மனிதன் மீது அன்பு வைப்பதைக் காட்டிலும் தமது செல்லப்பிராணிகளான நாய், பூனைகள் மீது அதிகம் அன்பு செலுத்துகிறான்.



மனிதாபிமானத்தை மறந்து இயந்திரத்தனமான வாழ்க்கைக்கு பழக்கப்பட்டுவிட்ட மேலை நாடுகளில் உள்ளவர்கள் அதிகம் அன்பு வைப்பதும் மனிதாபிமானம் காட்டுவதும் இத்தகைய வளர்ப்புப் பிராணிகள் மீது தான். ஆனால், அதிலும் ஒரு சிக்கல் கடுமையான சட்டதிட்டங்கள் ஒழுங்கு முறைகளைக் கொண்ட மேலைநாடுகளில் செல்லப் பிராணிகளை வளர்ப்பதற்கு அவற்றின் உரிமையாளர்கள் படாதபாடு படவேண்டியுள்ளது.


தமது செல்லங்கள் வீட்டையும் சுற்றாடலையும் அசுத்தப்படுத்தாமல் பார்த்துக்கொள்வதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் அவர்கள் அதிக அக்கறை காட்டவேண்டியுள்ளது. அது மட்டுமல்ல சில சமயங்களில் அவர்களது செல்லப்பிராணிகள் அவர்களது கட்டுப்பாட்டை மீறியும் செயற்பட்டுவிடுகின்றன. சொல்வழி கேட்காமல் நடக்கின்றன. அப்போது இவற்றை ஏன் வளர்க்கின்றோம் என்று எரிச்சல் ஏற்படுவதுமுண்டு.

மேற்கு நாட்டவர்களின் இந்த அவஸ்தையை தமக்குப் பணமாக்கிக் கொள்ள நினைத்தார்கள் ஜப்பானியர்கள். உடனேயே தமது மூளையைப் பயன்படுத்தி தேவைக்கேற்ற வகையில் செயற்படக்கூடிய ரோபோ நாய்களை உருவாக்கிவிட்டார்கள். அவர்கள் ரோபோ உற்பத்தியில் முன்னணியில் திகழும் ஜப்பானின் சொனி (Sony) நிறுவனம் இந்த பொழுதுபோக்கு ரோபோ நாய்களை உற்பத்தி செய்து விற்பனைக்குவிட்டது. மேலைநாடுகளிலும் ஏன் ஜப்பானிலுமே கூட இவற்றுக்கு ஏகப்பட்ட வரவேற்பு.

உயிருள்ள செல்லப் பிராணிகளை வளர்ப்பதைவிட இத்தகைய ரோபோ நாய்களை வாங்கி வளர்ப்பதில்தான் தற்போது அதிக ஆர்வம் காட்டப்படுகின்றது.

இந்த ரோபோ நாய்களில் பல விசேடங்கள் உண்டு. அவை தன்னிஷ்டப்படி எதனையும் செய்யாது. எஜமான் என்ன சொல்கிறாரோ அதனை மட்டுமே செய்யும். அவ்வாறு அது நடந்து கொள்ளக்கூடிய வகையில் அது புரோகிராம் (Programme) செய்யப்பட்டுள்ளது.

ரோபோ நாய்களுக்கு வேண்டிய அடிப்படை புரோகிராமை சொனி நிறுவனம் செய்து வைத்திருக்கும். அதனை வாங்கும் உரிமையாளரின் விருப்பத்திற்கேற்ப அந்த புரோகிராம்களில் சில சிறிய மாற்றங்களையும் செய்து கொள்ளலாம். இதனால், எஜமானின் விருப்பத்துக்கு ஏற்றவாறு மட்டும் ரோபோ நாய் செயற்படும். வீட்டுக்குக் காவலிருக்கும். வேண்டத்தகாதவர்களின் நடமாட்டம் கண்டால் உரிமையாளருக்கு தகவல் தெரிவிக்கும்.



பிரேம்


ஆனால், பெருங் குரலெடுத்துக் குரைத்து ஊரைக் கூட்டாது. ஏனைய நாய்களுடன் சண்டைக்குப் போகாது.

வீட்டையோ சுற்றாடலையோ அசுத்தம் செய்யாது. தப்பித் தவறியும் எஜமானுக்குப் பிடிக்காததைச் செய்யாது. மெதுவாக நடக்கும். எப்போதும் விழிப்பாக இருக்கும். அடுத்தவருக்கு இடைஞ்சல் தராது. இவையெல்லாம் இந்த ரோபோ நாயின் விசேட குணங்கள். இதனால் தானோ என்னவோ இவற்றை வாங்கி வளர்ப்பதில் (பராமரிப்பதில்) மேலைநாட்டவர்கள் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். அதிலும் ஆதரவு இன்றித் தனித்திருப்பவர்கள் வீடுகளில் நிச்சயம் சொனி நிறுவனத்தின் ரோபோ நாய் இருக்கும்.

இவற்றுக்கு நோய் ஏற்பட்டால் சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவ கூடங்களும் இப்போது பரவலாகத் திறக்கப்பட்டு வருகின்றன. அதாவது ரோபோ நாயில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் அதனைச் சரி செய்வதற்கான திருத்துமிடங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

(08ஆம் பக்கம் பார்க்க)

### அய்போ



உதயன்

## போராடும் ஆசிரியர்களும் பதுங்கும் தலைவர்களும்

இலங்கையின் பலம்மிக்க ஆசிரியர் சங்கங்களுள் ஒன்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

ஆசியர் சங்கம் என்றால் அது எப்பொழுதுமே ஆசிரியர்களின் சம்பள உயர்வு, இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு போன்ற விடயங்களைத்தான் கவனத்தில் கொண்டு இயங்கும் என்ற கருத்து ஒரு காலத்தில் இருந்தது.

அந்தக் கருத்தை மாற்றி ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவர்கள் மற்றும் அவர்களுடைய பெற்றோரான பொதுமக்கள் ஆகியோரிலும் கரிசனை கொண்டு அவர்களின் நலன்களுக்காகவும் போராடுவது ஆசிரிய சங்கங்களின் கடமை என்பதைச் செயலில் காட்டிவரும் பெருமைக்கு உரியது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

இந்தச் சங்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுகவீன லீவுப் போராட்டம் நடத்தப்போவதாக முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறது.

மொத்தம் 31கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் நடத்தப்போகிறது. இவற்றுள் 28 கோரிக்கைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் சம்பந்தப்பட்டவை. மற்றைய மூன்று கோரிக்கைகளும் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அரசியல் கோரிக்கைகள். அவை வருமாறு:-

1. வணக்க ஸ்தலங்களில் இருந்து புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி படையினர் வெளியேறவேண்டும்.

2. புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் படையினர் நிறுத்திக்கொள்ள வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசு தாமதம் காட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

3. புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி சமாதான நகர்வுகளை வேகமாக மேற்கொள்வதற்கும் பேச்சை ஆரம்பிப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு உடனடியாக நீக்க வேண்டும்.

ஆசிரியர்கள், மாணவர்கள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளோடு பொதுமக்கள் தொடர்பான அரசியல் கோரிக்கைகளையும் முன்வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவது இது முதல் முறையல்ல.

முன்னர் பல தடவைகளில் அவர்கள் இப்படியான போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் நலன் சம்பந்தப்பட்ட எந்தப் போராட்டத்திலும் தமிழர் ஆசிரியர்கள் எப்போதும் முன்னணியிலேயே காணப்படுகிறார்கள். போராட்டங்களை பிறர் ஒழுங்கு செய்யாவிட்டால் தாமே அவற்றை ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடத்தப்போகும் சுகவீன லீவுப்போராட்டமும் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதேயாகும்.

தமிழ் மக்களின் நலனில் தமிழ் ஆசிரியர்களுக்கு உள்ள அக்கறையும் கரிசனையும் தமிழ் அரசியற் தலைவர்களுக்கு உண்டா?

தமிழீழ விடுதலைப் புலிகளால்தான் தாம் இம்முறை நாடாளுமன்றப் படியேற முடிந்தது என்பதை ஒப்புக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களாவது புலிகள் மீதான தடையை அரசு நீக்கவேண்டும் என்று கோரிப் போராட்டம் நடத்த முன்வரவில்லை. தடையை நீக்கு என்று ஒப்புக்கு அறிக்கையை விட்டு விட்டுச் சும்மா இருக்கிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி காரியங்கள் நடைபெறவில்லை. நடைபெறச் செய்வதற்கு வேண்டிய அழுத்தத்தையாவது அரசிற்கு கொடுக்கிறார்களா? இந்த எம்.பிக்கள் அதற்கும் பத்திரிகை அறிக்கைதான் அல்லது அவர் இவருடன் சந்திப்பு என்று கணக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். போராட்டம் நடத்தத் துணிவும் இல்லை. திராணியும் இல்லை.

புலிகள் ஒன்றுக்கு இரண்டுமுறை இவர்களை அழைத்து அறிவுறுத்தல் கொடுத்துப் பார்த்து விட்டார்கள். இன்னமும் அவர்களிடம் விவேகத்தையும் காணோம். வேகத்தையும் காணோம்.

தமிழர் ஆசிரியர்கள் போராடுகிறார்கள்; இவர்கள் பதுங்குகிறார்கள். அவர்களைப் பார்த்தாவது இவர்கள் திருந்தவேண்டாமா?

புலிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களும் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். திருந்தாதவர்கள் திருத்தப்படுவார்களா அல்லது வீட்டுக்கு அனுப்பப்படுவார்களா யார் கண்டது?

# மீன்பிடிக் கட்டுப்பாடுகள் நாளை முதல் நீங்கிவிடும்

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் தகவல்

கொழும்பு,மே22

வடக்கு - கிழக்கு கடலில் இரவிலும் பகலிலும் மீன்பிடிப்பதில் இதுவரை இருந்து வந்த கட்டுப்பாடுகள் நாளை வியாழக்கிழமை முதல் நீக்கப்பட்டுவிடும் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்தபோதே அவர் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து 90 நாள்கள் பூர்த்தியடையும்போது மீன்பிடிப்பதில் இருந்த கட்டுப்பாடுகள் யாவும் தானாகவே வலுவிழந்ததாகின்றன என்றும் அவர் கூறினார்.

கட்டுப்பாடுகளை நீக்குவதில் சில விதிவிலக்குகள் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி -

கரையோரங்களில் உள்ள படைமுகாம்களின் இருபக்கமும் ஒவ்வொரு கடல்மைல் தூரத்துக்குள்ளும் கடற்பக்கமாக இரண்டு கடல்மைல் தூரத்துக்குள்ளும் மீன்பிடித்தல் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

கரையோரமாக உள்ள துறைமுகங்களுக்குள்ளும் துறைமுக வாயில்களிலும் குடாக்களிலும் முகத்துவாரங்களிலும் மீன்பிடித்தல் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

அவர் மேலும் கூறினார். (ஐ-3)

### திருமணம் புரிவதாகப் பெண்ணை ஏமாற்றி

## ஒரு லட்சம் ரூபாவைக் கையாடிய வவுனியாவாசி நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,மே22

திருமணம் செய்வதாகக் கூறி ஒரு லட்சம் ரூபா பணத்தை பெண் ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொண்டு நம்பிக்கைத் துரோகம் செய்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

வவுனியா, பிள்ளையார் கோயில் வீதியைச் சேர்ந்த நிக்கலஸ் பிறேம லக்ஸ்மணன் என்ற நபரே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பஸ் நிலையப் பகுதியில் வைத்து குறிப்பிட்ட பெண்ணின் தந்தையாரால் சந்தேக நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

மேற்படி நபர் ஏற்கனவே திருமணம் புரிந்து இரு பிள்ளைகளுக்குத் தந்தை என்று நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சந்தேகநபரை 50ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் (இருவர்) 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன் மாதத்தின் கடைசிச் சனிக்கிழமைகளில் யாழ்.பொலீஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (க-10-8-ரி)

## தரைப்பாதை களைகட்ட விமானசேவை பிசுபிசுப்பு!

கொழும்பு,மே22

வடக்கு - தெற்கு இடையேயான போக்குவரத்துக்கு பெரும்பாலானவர்கள் ஏ-9 தரைப்பாதையைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதால், வான் மற்றும் கப்பல் சேவைகள் பிசுபிசுத்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனாலும், வர்த்தகர்கள் உட்பட வடக்குக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்வோரை இலக்கு வைத்து விமானசேவைகளை நடத்த சில விமான சேவை நிறுவனங்கள் முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தரைப் பயணம் தொடர்பாக ஓமந்தையில் பணியாற்றும் இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்,

வவுனியாவிலிருந்து தினமும் சுமார் 3ஆயிரம் பேர் யாழ்பாணத்துக்கும் இங்கிருந்து கணிசமானவர்கள் தெற்குக்கும் பஸ் போன்ற பொது வாகனங்கள் மூலம் பயணம் மேற்கொள்வதாகவும் -

இவர்களைத்தவிர தினமும் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல் அல்லது சொந்த வாகனங்கள் என சுமார் 300 வாகனங்கள் மூலம் ஆயிரத்து 500பேர் வரை வவுனியாவிலிருந்து யாழ்.செல்ல அங்கிருந்து கணிசமானவர்கள் இங்கு வருவதாகவும் - தெரிவித்தார்.

தரைவழிப் பாதைப் போக்குவரத்து இப்படிக் களைகட்டும் அதேசமயம், விமான சேவை நடத்தும் 'லயன் எயர்' அதிகாரி கூறுகையில், பாதை திறப்புக்கு முன்னர் தினசரி 300 பயணிகளை ஏற்றிச் சென்ற விமானங்கள் தற்போது 150க்கும் குறைவான பயணிகளையே ஏற்றிச் செல்வதாகக் கூறினார்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் தரைவழிப் பயணத்துக்கு ஈடுகொடுக்கும் உடல் நிலை இல்லாததாலேயே விமானத்தை நாடுவதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில் 'செரன்டிப் எக்ஸ்பிரஸ்' நிறுவனம் எதிர்வரும் ஜூலை முதல் பலாலியிலிருந்து உள்ளூர் விமான சேவைகளை நடத்த உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் தர்சனா குணவர்த்தனா தெரிவிக்கையில், தற்போது நடைமுறையில் உள்ள கட்டணத்தைவிட 20 வீதம் குறைவான தொகையையே தமது விமான சேவைக்கு அறவிட எண்ணியுள்ளதாகக் கூறினார். அத்துடன் 'எயர் லங்கா' நிறுவனமும் பலாலியில் இருந்து விமானசேவையை ஆரம்பிக்கத் திட்டமிட்டு வருகிறது.(ஒ-ரி)

### ஈச்சம்பழம் பிடுங்கச் சென்ற

## வாழைச்சேனை மாணவர் மூவர் இன்னும் வீடு திரும்பவில்லை

வாழைச்சேனை,மே22

வாழைச்சேனைப் பகுதியில் 3 பாடசாலை மாணவர்கள் காணாமற்போயுள்ளதாக வாழைச்சேனை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி 6 மாணவர்கள் ஈச்சம்பழம் பிடுங்குவதற்காக சைக்கிள்களில் புறப்பட்டனர். வாழைச்சேனை - மயிலங்கரச்சி இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் ஈச்சம்பழம் பிடுங்கவே இவர்கள் சென்றிருந்தனர். அவர்களில் 3பேர் பின்னர் வீடு திரும்பிவிட்டனர். ஏனைய மூன்று பேரும் இன்னமும் வீடு திரும்பவில்லை. இவர்களைக் கண்டுபிடித்துத் தரும்படி அந்த முறைப்பாட்டில் கேட்கப்பட்டுள்ளது.

17 வயதான தவராஜா, 15 வயதான கந்தசாமி புஸ்பாகரன், 13 வயதான முஹம்மது கனிபா அல்வர் ஆகியோரே காணாமற்போனவர்களாவர். இவர்களைத் தேடும்பணியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். (க)

# வன்னிப் பாடசாலைகள் மீள் புனரமைப்பு; 14 கோடி ரூபா தேவை எனக் கணிப்பு

கிளிநொச்சி,மே22

வன்னிப் பிரதேச பாடசாலைகளை மீளப் புனரமைக்க 14 கோடி 30 லட்சம் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார அமைச்சின் செயலாளர் எஸ்.சண்முகலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தசாப்த காலமாக வன்னிப் பிரதேச பாடசாலைகள் போரினாலும் பொருளாதாரத் தடையினாலும் பாதிக்கப்பட்டுவந்தன.

அங்கு பெரும்பாலான மாணவர்கள் தரையில் அமர்ந்தே கல்வி கற்று வருகின்றனர். எனவே தளபாடங்களை உருவாக்க 80 லட்சம் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக நிலவுகின்றது. குறிப்பாக வவுனியா வடக்கு வலயத்தில் 609 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், அங்கு 32 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். இதனால் இங்கு 577 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடுப்பகுதிகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. ஆகவே, இவற்றை விசேட செயற்றிட்டம் மூலமாகவே புனரமைக்க முடியுமென அவர் மேலும் கூறினார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி முடிவு செய்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் அண்மையில் வன்னிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

அக்குழுவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜோன் ஆர்.கூரே, திட்ட நிபுணர் கே.என். திலகரத்ன மற்றும் 'நெக்கோர்ட்' அமைப்பின் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன், பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.எம். குரூஸ் ஆகியோர் சென்றிருந்தார்கள்.

இக்குழுவினர் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களையும் சந்தித்தனர்.

அங்கு அவசிய தேவைகள் குறித்து விசேட கூட்டங்களையும் நடத்தினார்கள். அரச அதிபர்கள் சமர்ப்பித்த சில திட்டங்கள் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதன் அடிப்படையில் நெடுங்கேணி வைத்திய சாலையை மீள் புனரமைப்பதோடு அங்கு நீர் வழங்கலை மேற்கொள்வதென்று முடிவானது. கிளிநொச்சி ஆதார வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவுக் கட்டடமொன்றை அமைப்பதென்றும், சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குப் புதிய அம்புலன்ஸ் ஒன்றை வழங்கவும் குழுவினர் தீர்மானித்தனர். (க)

### நாளை

வைகாசி 09
வியாழக்கிழமை
(23.05.2002)
திதி : துவாதசி
நள்ளிரவு 12.04 வரை.
நட்சத்திரம்: அத்தம்
முற்பகல் 8.30 வரை.
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம்: 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நீ உன்னை பலவீனன் என்று ஒருபோதும் எண்ணாதே. எழுந்து நில். உன் விதியை படைப்பவன் நீயே என அறிந்து கொள்.

## தரைவழியாகத் தபால்களை எடுத்துவருவதற்கு ஏற்பாடு

யாழ்.குடாநாட்டுக்கான தபால்கள் மற்றும் முத்திரைகளைத் தென்பகுதியில் இருந்து ஏ-9 தரைவழிப்பாதை ஊடாக எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் பிரதி வியாழக்கிழமைதோறும் எடுத்துவரப்படும் தபாற்பொதிகளில் உள்ள தபால்கள் குறிப்பிட்ட சில தினங்களுக்கு முன்னர் தபாலில் இடப்பட்டவையாகவே உள்ளதாகவும் -

தரைவழிப்பாதை ஊடாக வாரத்தில் இரண்டு மூன்று தடவைகள் எடுத்துவருவதன் மூலம் உடனடியாகவே தபால்களை இங்கு எடுத்துவரமுடியும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-10)

## நூல் சமர்ப்பணமும் வெளியீட்டு விழாவும்

*நூல்:* வல்வெட்டி அருள்மிகு வேவில் வீரகத்தி விநாயகர் தோத்திரப் பாமலர்கள் - பிள்ளையார் புராண வசனத்துடன்

*நூலாசிரியர்:* கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி (வல்வெட்டி)

*இடம்:* வல்வெட்டி வேவில் விக்னேஸ்வரர் ஆலயம்

*பங்குபற்றுவோர்:* சங்கீத பூஷணம் திருமதி பி. சிதம்பரப்பிள்ளை, திரு.சி.இராசரத்தினம், சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர், சிவஸ்ரீ தி.விக்னேஸ்வரக்குருக்கள் , சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள், திருமதி நாச்சியார் செல்வநாயகம், திருமதி கலைவாணி இராமநாதன்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(3907) *– ஏழாம் திருவிழா உபயகாரர்.*



**Ceylinco Insurance Company Limited**

*Ceylinco Life Centre, 134, Galle Road,*
*P.O.Box 899, Colombo - 3, Sri Lanka.*
*Tel: 438294-5, 424812-5*
*Telegrams: CEYLINCO Fax: (94-1) 437613*
*Website: www.ceylife.lk*

## சிலிங்கோ
## இன்சூரன்ஸ் கம்பனி (ஆயுள்)

*இப்பொழுது யாழ்.மண்ணில்*

இலக்கம் 560, ஆஸ்பத்திரி வீதி,
செலான் வங்கி கட்டடம்,
யாழ்ப்பாணம்.

இலங்கை காப்புறுதி வரலாற்றில் முதன்முறையாக 10 மடங்கு காப்புறுதியை வழங்குபவர்கள்.

இப்பொழுதே உங்கள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

எங்கள் அலுவலகம் சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

(C/22161)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 22 |
| 01 | 05 |
| 1919 | 2001 |

### திருமதி டீ.ஆர்.இராஜரட்ணம்

உங்கள் நினைவுகளில் என்றென்றும் வாழ்ந்திடுவோம்!

*மல்லாகம்.* (3910) - குடும்பத்தினர்.

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 | 23 |
| 03 | 04 |
| 1916 | 2002 |

### அமரர் சரவணமுத்து சக்திவேல்

(ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர்)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்களை எங்களால் மறக்க முடியவில்லையே! ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (23.05.2002) வியாழக்கிழமை முற்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். எனவே இந்நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

*நெடியகாடு,*
*பிள்ளையார் கோயிலடி,*
*வல்வெட்டித்துறை.* (3974)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,மே22

வடமராட்சி, உப்புவல்லைச் சந்தியில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து சுயநினைவிழந்து, ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர், 14 நாள்களின் பின் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார்.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த சண்முகம் சந்திரலிங்கம் என்பவரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணை, பிரதேச பரிசோதனையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15-ரி-139)

## ஆஸ்பத்திரி ஊழியர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் கடமையில் இருந்த சிற்றூழியர் ஒருவர் கார் சாரதி ஒருவரால் தாக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிற்றூழியரான கணேசையா யோகேஸ்வரன் (வயது39) என்பவரே தாக்குதலுக்குள்ளானவராவார்.

தாக்குதலுக்குள்ளானவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடமை நேரத்தில், வைத்தியசாலை வளவினுள் வைத்து இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக, வைத்தியசாலை நிர்வாகத்திடமும், யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி-15-139)

## குடும்பஸ்தர் கிணற்றில் வீழ்ந்து மரணமானார்

காரைநகர்,மே22

காரைநகர் களபூமிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிணற்றுக்குள் தவறி விழுந்து மரணமானார்.

காரைநகரைச் சேர்ந்த கா.சுந்தரேஸ்வரன் (வயது 62) என்பவரே மரணமானவராவார்.

கடந்த ஒரு மாதத்திற்குள் காரைநகர்ப் பகுதியில் 7 பேர் திடீர் மரணமடைந்துள்ளனர். அவர்களுள் மூவர் இதே பகுதியில் கிணற்றுக்குள் வீழ்ந்து மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-73)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*வைத்தியத்துறையில் 50 வருடங்கள் சேவையுரிந்து, தடம்பதித்த மட்டுவில் வடக்கு ஆரோக்கியவாச வைத்தியசாலை உரிமையாளர்*

**வைத்தியர் பேதுரு பிலிப்ஸ்**

அவர்கள்

ஜனாதிபதியின் 'சஹாஸ்ராபிஷேக வைத்திய சிகாமணி' பட்டம் பெற்றதையிட்டு மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*'ரிசிலை',*
*ஆனைக்கோட்டை.* (3980)

இராயப்பு டேவிட்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 22 |
| 05 | 04 |
| 1914 | 2002 |

### திருமதி ஐயம்பிள்ளை பொன்னம்மாள்

அன்பையும் பண்பையும் அறிவுறுத்தி
இன்பமாய் எமை வாழவைத்து
இறைபதம் எய்திய அன்னையே!
உன் பதம் தாழ்பணிவோம்.

கடந்த 22.4.2002 இல் இறைபதம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (22.5.2002) புதன்கிழமை அன்னாரின் கரணவாய் வடக்கு, கரவெட்டி (நவிண்டில்) இல்லத்தில் நடைபெறும்.

இன்று நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
மக்கள், மருக்கள்,
பேரப்பிள்ளைகள்,
திருமதி சிவலிங்கம் *(மகள்).*

*கதிரிப்பாய்,*
*அச்சுவேலி.* (3758)


வடக்கு கிழக்கில் வாழும் வியாபாரிகளுக்கு அநேக வருடங்களுக்குப் பிறகு கிடைக்கும் சிறந்த தயாரிப்புகள்.

எங்கள் தயாரிப்புகள் அநேக வருடங்களாக மக்கள் நம்பிக்கையை. பெற்றிருக்கின்றன இலங்கையின் எல்லாவித காலநிலைகளுக்கும். ஒத்துப்போகக்கூடிய விதத்தில் தயாரித்துள்ள படியினால் உங்கள் வியாபார.
நிலையத்திலும் எங்கள் தயாரிப்புகளை வைத்து இலாபத்தைக் கூட்டிக்கொள்ளுங்கள் வடக்கு கிழக்கு மக்களுக்கு நல்ல தயாரிப்புக்களை.
விநியோகித்து மக்கள் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.




மேலதிக தகவல்களுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.

**Causeway Paints Lanka Pvt Ltd.**

No: 15, Noel Mendis Mawatha, Moderawila Industrial Estate, Panadura.
Tel: 038-40040 Fax: 038-40046 Website: www.causewaypaints.com

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

றொயாட்டா கயஸ் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.ரவீந்திரராஜன், 11, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (3954)

ஆ...கு... சண்டிலிப்பாய் வீதியில் அமைந்துள்ள ...ரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெ.ராஜகோபாலன் கோ...லம், சண்டிலிப்பாய். (3967)

படப் பிரதிகளும், J.V.C. டெக்கும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.யோகராஜா, "செங்கமலம்", வல்லை வீதி, அச்சுவேலி (ரைப்ரைட்டிங் வீடு). (3965)

நல்ல நிலையிலுள்ள இரண்டு கதவுகள் உடைய Sony SR175H(G) Code No. 1-83183450 குளிரூட்டி விற்பனைக்கு உண்டு தொடர்பு: M.வேலாயுதன் 216,ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (3985)

## புறொயிலர் விற்பனைக்கு

வைத்திய ஆலோசனைப்படி எம்மால் வளர்க்கப்பட்ட நோயற்ற புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு (வாங்கி விற்கப்படுபவை அல்ல.) சுகாதார முறைப்படி இலவசமாகச் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, வட்டக்குளம் முன்பாக, பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய். (3987)

## இலக்கிய கட்டுரைகள்

சிறுகதைகள், "வீரற்றவன்" நாவல், குறுநாவல், "பணமோ பணம்" நாடகம், இலக்கிய விமர்சனம் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியிருக்கிறார் எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. மாணவர்கள் நடிப்பதற்குப் பொருத்தமான "பரிசு" நாடகமும் உள்ளது. (3929)

## தவறிவிட்டது

விடத்தற்பளை, மிருசுவிலைச் சேர்ந்த கதிரேசு சுகந்தா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (767951760V), விசேட அடையாள அட்டை (091024993), பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன 18.05.2002 அன்று வவுனியாவுக்கும், முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நேரிலோ, தபாலிலோ மேற்கூறிய முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (3976)

## யாழ் நகர்ப் பகுதியில் 2 சைக்கிள் திருட்டு

யாழ். துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் விடப்பட்ட இரண்டு சைக்கிள்கள் ஒரே நாளில் திருட்டுப் போய்விட்டன. கடந்த சனிக்கிழமை யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட இரு பெண்களின் சைக்கிள்களே பறிபோய்விட்டன. (க-86)

## நல்லூரில் இன்று கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும், கொக்குவில் உப அலுவலக கோண்டாவில் கிழக்கு வள்பிறை சனசமூக நிலைய சூழலிலும கட்டாக்காலி நாய்களைப பிடித்து அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்று காலை 8.00 மணி தொடக்கம் ஆடியபாதம் வீதி, இராமலிங்கம் வீதி, ஜி.பி.எஸ் வீதி, இராச வீதி, செங்குந்த வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய பகுதிகளிலேயே நாய்கள் பிடித்து அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டிவைப்பதுடன், நாய் வளர்ப்பதற்கான உரிமத் தகடுகளை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் மக்களுக்கு நல்லூர் பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (க-13)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/22214)

# கண்டி வீதியை முழுமையாக திறக்க இருதரப்பும் ஆர்வம்

## கண்காணிப்புக்குழுத் தலைவர் கூறுகிறார்

வவுனியா,மே22

ஏ-9 பாதை... எதுவித கட்டுப்பாடு... இன்றி முழுமையாகத் திறந்துவிடுவதற்கு இரு தரப்பினரும் விருப்பத்துடன் செயற்பட்டுவருகின்றனர்.

- இவ்வாறு வவு...யா மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்கு...வின் தலைவர் ஜிக்கா ...ன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதையை முழுமையாகத் திறந்துவைப்பதற்கான தமது விருப்பத்தை ஏற்கனவே விடுதலைப் புலிகள் தெரிவித் துள்ளனர்.

இந்தப் பாதை சம்பந்தமான சில சிக்கல்கள் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

வாரத்தில் 7 நாள்களும் முழுமையாகப் பாதையால் உணவுப் பொருள்களை ஏற்றிச்செல்வது தொடர்பாக இருதரப்பாரிடமும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

காலை 6 மணிமுதல், மாலை 6மணிவரை பாதையைப் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்துவிடுவதில் இழுபறி நிலை காணப்படுகிறது.

சில முக்கிய கட்டடங்களில் இருந்து இராணுவத்தினரை அப்புறப்படுத்துவது சம்பந்தமாக ஆராயவென நாங்கள் வவுனியாவின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளோம் - என்று அவர் தெரிவித்தார்.(ஐ-12)

# தமது காவலில் இருக்கும் போர்க் கைதிகளை உறவினர் சந்திக்க புலிகள் அனுமதி

கொழும்பு,மே22

தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் 7 இராணுவத்தினரையும் அவர்களது குடும்பத்தினர் பார்வையிட விடுதலைப் புலிகள் அனுமதியளித்துள்ளனர்.

இதனை அடுத்து 'சாகரவர்த்தன' கப்பலின் கட்டன் அஜித் போயாகொடவைச் சந்திக்க மனைவியும் இரு பிள்ளைகளும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைமையகத்திலிருந்து மல்லாவிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவர்களுடன் மேலும் 13 உறவினர்களும் போர்க் கைதிகளைப் பார்வையிடுவதற்காகச் சென்றுள்ளார்கள.

இராணுவக் கைதிகள் மல்லாவிக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு இரண்டு தினங்கள் உறவினருடன் தங்கியிருக்க அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-12)

## வவுனியாவில்

# படையினர் தங்கியுள்ள இடங்களை கண்காணிப்புக்குழு பார்வையிடும்

வவுனியா,மே22

வவுனியாவில் இராணுவம் தங்கியிருக்கும், ஆலயங்களையும் பாடசாலைகளையும் பார்வையிட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு இன்று செல்லவிருக்கிறது. இக்குழு, பத்திரிகையாளர்களையும் அழைத்துச் செல்லும்.

கண்காணிப்புக் குழுத் தலைவர் பேலேனன் நேற்றுமுன்தினம் வவுனியாவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபொழுது இவற்றைத் தெரிவித்தார்.

வவுனியாவில் குறைந்தளவு யுத்தநிறுத்த மீறல் முறைப்பாடுகளே கிடைத்திருக்கின்றன. 26 முறைப்பாடுகளில் பாரதூரமான சம்பவங்கள் எதுவுமில்லை.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்கு மேலும் 25 கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவிருக்கின்றனர். அவர்களில் இருவர் வவுனியாவுக்கு வருவர்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் புலிகளின் வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் மேஜவன் மற்றும் எழிலன், கூட்டணி இணைப்பாளர் மூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-12)



கட்சி அரசியல்மூலம் உரிமை பெறமுடியாது

# முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆவணப்படுத்தும் திட்டம் அவசியம்

## முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத் தலைவர் கருத்து

கொழும்பு,மே22

இனப்பிரச்சினைக்காகத் தீர்வை எட்டும் நோக்கில் சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்போது முஸ்லிம்கள் வெற்றுக்கையோடு செல்லும் நிலைமை ஏற்படக்கூடாது. முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் ஆவணப்படுத்தித் திட்டமொன்றை எடுத்துக்கொண்டே முஸ்லிம்கள் சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்க வேண்டும்.

- இவ்வாறு முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத் தலைவர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் அடையாளப்படுத்தும் ஆவணங்களைச் சேகரிப்பதற்கும், அவர்களுக்கான ஏனைய பிரச்சினைகளை அடையாளங்காணும் முகமாகவும் மாவட்டம் தோறும் உள்ள கட்சிபேதமற்ற சகல தரப்பையும் சேர்ந்த பிரமுகர்களுக்கான கூட்டம் முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் முதற்கட்ட கூட்டம் கடந்த சனிக்கிழமை கொழும்பு வாட் பிளேஸிலுள்ள ஆய்வு நிலையத்தில் கிழக்குப் பகுதி பிரமுகர்களுடன் இடம்பெற்றது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆய்வு நிலையத் தலைவர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தனதுரையில்:-

முஸ்லிம் சமூகம் கட்சி, அரசியலுக்கு அப்பால் நின்று ஒற்றுமையுடன் செயற்படத்தவறினால் எதிர்காலத்திலும் நாம் அடிமைச் சமுதாயமாகவே இருக்கவேண்டிய நிலையே தொடரும்.

தமிழர்கள் கடந்த 25 வருடங்களுக்கு முன்பு ஒன்றுபட்டதன் காரணத்தால்தான் இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபலம் பொருந்திய இயக்கமாக சர்வதேச சமூகத்தில் அங்கீகாரம் பெற்றுள்ளது. முஸ்லிம்கள் இதுவரை ஒன்றுபடவில்லை. நாம் சகல பிளவுகளையும் மறந்து ஒன்றுபட்டு வாழ வேண்டும்.

கட்சி அரசியல் மூலம் எமது உரிமைகளையும் அதிகாரங்களையும் பெறமுடியாது. சமூக எழுச்சி மிக முக்கியமானதாகும். அரசியல் பலமும் சமூக பலமும் ஒன்றாகச் சேர்ந்து செயற்படவேண்டும்.

நாம் திட்டமிட்டுச் செயற்பட்டால் எந்த சவால்களுக்கும் முகங்கொடுக்க எம்மால் முடியும். இதன் ஆரம்பகட்டமாக எதிர்வரும் நான்கு மாதங்களுக்குள் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான ஆவணங்களைத் திரட்டும் பணி தீவிரப்படுத்தப்படும்.

இனப்பிரச்சினையில் வட-கிழக்கு முஸ்லிம்கள் பாரியளவு பாதிப்படைந்துள்ளனர். முஸ்லிம் சமூகம் இன்னும் பயந்த நிலையில் வாழ்ந்து வருகிறது. முஸ்லிம் சமூகத்தில் பொருளாதார ரீதியில் ஒரு கூட்டமைப்பு அவசியமாகும். கைத்தொழில் வர்த்தக, பொருளாதார நடவடிக்கைகளை கிராம மட்டத்தில் முன்னெடுக்க வேண்டும். கூட்டு வர்த்தகத் துறையில் நாம் முன்னேற்றம் காண வேண்டும்.

இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிராக மனித உரிமை மீறல்கள் இடம்பெறும்போது அதற்காகக் குரல் கொடுப்பதற்காக விரைவில் முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தில் சட்டத்துறையொன்று ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்த அமைப்பை கட்சியின் தலைமையலுவலகமான தாருஸ்ஸலாமில் அமைக்க வேண்டுமென எண்ணியிருந்தார். அதற்கிடையில் அவர் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். அவரது ஞாபகார்த்தமாக நாம் இந்த ஆய்வு நிலையத்தை ஆரம்பித்தோம் என்றும் கூறினார். ★

# ஜெனரல் உங்களுக்கும் இந்தக் கதியா?

கடந்த 10ஆம் திகதி கண்டியில் போகம்பர மைதானத்தில் புரிந்துணர்வு உடன்பாட்டை எதிர்த்து பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி.ஆகிய கட்சிகள் இணைந்து கூட்டம் நடத்துவதாக இருந்தது. இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றியிருந்த பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த பிரமுகர்கள் முதலில் பேராதனை வாடிவீட்டில் கூடினர்.

கூட்டம் ஆரம்பமாக இன்னும் நேரம் இருக்கவே அனுரா பண்டாரநாயக்காவும் மற்றும் சில பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு சுகவீனம் காரணமாக கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜெனரல் அனுருத்த ரத்வத்தையைப பார்க்கச் சென்றனர்.

*அனுரா:* ஜெனரல் எப்படி இருக்கிறீர்கள்?
ரத்வத்த: சுகமாய் இருக்கிறேன்.
*அனுரா:* நான் அதைக் கேட்கவில்லை. உங்களது சுகவீனம் எப்படி?
ரத்வத்த: இப்போது சுகமாகிவருகிறேன். எனது இளைய மகனும் அடுத்த அறையில்தான் இருக்கிறார்.

அடுத்த அறையில் இருந்த ரத்வத்தையின் இளைய மகனை அனுரா அழைத்தார். தான் அனுபவித்துவரும் துன்பங்களை அவர் அனுராவிடம் எடுத்துக்கூறினார்.

"நாங்கள் போகம்பர சிறைச்சாலையில் உல்லாசமாக வாழ்வதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. சிறைச்சாலைக்குள் கைகளுக்கும் கால்களுக்கும் விலங்குமாட்டியே என்னை வைத்திருக்கிறார்கள்" என ரத்வத்தையின் இளைய மகன் அனுராவிடம் கூறினார்.

அப்போது ரத்வத்தையும் பேச்சில் கலந்துகொண்டார். சிறையில் தாங்கள் அனுபவிக்கும் துன்பங்களை அனுராவிடம் எடுத்துரைத்தார்.

"தற்போது நீதிமன்றத்தில் எங்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து விசாரிப்பதில்லை. பதிலாக சிறைச்சாலையில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளைப் பற்றியே நீதிமன்றம் விசாரிக்கின்றது. நாங்கள் வசதிகளை அனுபவிக்கிறோமா என்பதைக் கண்டறிய நீதிபதி சிறைச்சாலைக்கு விஜயம் செய்தார். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள ஒரு கைதி வசதியாக(உல்லாசமாக) இருக்கிறாரா என்பதைக் கண்டறிய சிறைச்சாலைக்கு நீதிபதி ஒருவர் வந்தது உலகில் இதுவே முதலாவது சம்பவமாக இருக்கும்.

போகம்பர சிறைச்சாலை ஒரு புதுமையான இடமாகும். அங்குள்ள மலசல கூடங்களுக்கு கதவுகளே இல்லை. அந்த மலசல கூடங்களையே பயன்படுத்த வேண்டியுள்ளது" எனத் தெரிவித்தார் ரத்வத்த.

அனுருத்த கூறியனவற்றைக் கேட்ட அனுராவுக்கு ஆத்திரம் பொங்கியது.

"அன்ரன் பாலசிங்கத்திற்கு சுகவீனம் என்று கூறியதுமே வெளிநாட்டிற்கு விமானத்தில் அவரை அனுப்ப அரசு வசதிகளைச் செய்துகொடுத்தது. அந்த அன்ரன் பாலசிங்கத்தை எதிர்த்து யுத்தம் செய்த ஜெனரலுக்கு சுகவீனம் ஏற்பட்டாலும் மருத்துவமனைக்கு அவரை அனுப்ப அரசிற்கு விருப்பமில்லை. ஆயிரக்கணக்கானோரைக் கொலைசெய்த ஒருவருக்கு விமானம் செல்லும் வழியையே மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுளளது. ஆனால், பயங்கரவாதத்திற்கு எதிராக யுத்தம் செய்த ஜெனரலுக்கு இந்தக்கதி. நாங்கள் இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்" எனத் தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார் அனுரா.

வந்தவர்கள் மருத்துவமனையில் இருந்து புறப்படத் தயாராகினர்.

"என்னால் கூட்டத்திற்கு வரமுடியாதே. இருப்பினும் போகம்பர மைதானம் அண்மையிலே உள்ளது. நான் இங்கிருந்தவறே கூட்டத்தில் பேசப்படுவனவற்றைக் கேட்டுக்கொண்டிருக்கலாம்" என்றார் ரத்வத்த.

இன்றைய நிலையில் அவரால் வேறு என்னதான் செய்ய முடியும். ஜெனரல் உங்களுக்கும் இந்தக் கதியா?

('லக்பிம' வார இதழில் வெளியான கட்டுரையின் குறிப்பிட்ட ஒரு பகுதியே இங்கு பிரசுரமாகியுள்ளது.)

# தென்மராட்சி மக்களின் பிணி தீர்த்துவந்த சாவகச்சேரி ஆஸ்பத்திரி உயிர் பெறுமா?

யுத்த அனர்த்தங்களால் பலத்த சேதங்களுக்கு இலக்காகி, கட்டட இடிபாடுகளுடன் பற்றைக்காடாகக் காணப்படும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு மீட்சி இல்லையா?

மக்கள் மீளக் குடியேறத் தொடங்கி நான்கு மாதங்களாகியும் இவ் வைத்தியசாலையைத் துப்புரவு செய்யக் கூட எவரும் முன்வராதது பற்றி கவலை தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழும் சுமார் ஒரு லட்சம் குடும்பங்களுக்கு பிரதான வைத்திய சாலையாகத் திகழ்ந்த இவ்வைத்தியசாலை பற்றைக்காடாகக் காணப்படுகிறது.

## செய்திக்கட்டுரை

ஆஸ்பத்திரியில் அலுவலகம், வெளிநோயாளர் பிரிவுகள், பல் வைத்தியப் பிரிவு, நுண்ணியல் பரிசோதனைப் பிரிவு, பிரசவ விடுதிப் பிரிவு, சமையலறை, நான்கு வார்ட்டுக்கள், வைத்திய அதிகாரிகள், மருத்துவத் தாதிகள், தொழிலாளர் விடுதிகள், சத்திரசிகிச்சை நிலையம், கிளினிக் கட்டடம், களஞ்சிய அறை, அம்புலன்ஸ் தரிப்பிடம் ஆகியவை பலத்த சேதங்களுக்கு இலக்காகி அவை அமைந்திருந்த இடங்கள் பற்றைக் காடாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் வருகை தந்த பிரதமர் உட்பட பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வர்த்தகப் பிரதிநிதிகள் உட்படப் பலர் இடிபாடுகளுடன் பற்றைக்காடாகக் காணப்படும் ஆஸ்பத்திரிக்கு விஜயம்செயது, அங்கு நின்று தம்மைப் புகைப்படம் எடுத்துச்சென்றார்களே தவிர ஆஸ்பத்திரியைப் புனரமைக்க எந்த முயற்சியும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புகள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் இருந்தபோதிலும் எந்த அமைப்பாவது ஆஸபத்திரியின் நலன்கருதி அதனை சிரமதான அடிப்படையில் துப்பரவு செயயமுன்வராதமை வருந்தத்தக்கது.

இவ்வைத்தியசாலையை மீண்டும் இயங்கவைக்க வேண்டுமென ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பி சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதாக விளம்பரங்கள் செய்து அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவழைத்து, மண்வெட்டிகளுடன் புகைப்படம் எடுத்து பெயரளவில் சிரமதானம் செய்தவர்கள் மீண்டும் அந்தப் பக்கம் நினைத்துக் கூடப் பார்க்காமல உள்ளனர்.

உலக செஞ்சிலுவைச் சங்க தினத்தை ஒட்டி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிக் கிளையின் உறுப்பினர்களும் தொண்டர்களும் ஒரு நாள் முழுவதும் சிரமதானத்தை ஆஸ்பத்திரியில் மேற்கொண்டு பற்றைக்காடாகக் காணப்பட்ட ஒரு பகுதியை துப்புரவாக்கினர்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் என அமைப்புகள் இருந்தும் அவை தற்போது எங்கே இயங்குகின்றன என்பது தெரியாமல் உள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள எந்தவொரு பிரஜைக்கும் இந்த ஆஸ்பத்திரியை வழமைநிலைக்குக் கொண்டுவருவதில் ஆர்வமில்லையா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

இது இவ்வாறிருக்க -

சாவகச்சேரி ஆஸ்பத்திரியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சுகாதாரத் திணைக்களமும் உஷாரான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சேதமடைந்த இரு கட்டடங்கள் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அதிகாரசபையினால் புனரமைக்கப்பட்டு இரு வார்ட்டுக்களுடன் தொழிற்படக்கூடிய விதத்தில் வசதி செய்யப்பட்டு மூன்று மாதங்களாகியும் அதனை இயக்குவதற்கு சுகாதாரத் திணைக்கள நிர்வாகம் இன்னமும் முன்வராமல் உள்ளது என்று கூறப்படுகிறது.

பிரதேசத்தில் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதும் வைத்திய சேவையின் முக்கியத்துவம் தெரியாமல் ஏனோதானோ என தட்டிக்கழிக்கும் போக்குத் தெரிகிறது. அவசர நோயாளர்கள், யாழ்ப்பாணம், மந்திகை ஆகிய இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

ஐ.கிருஷ்ணன்
(தென்மராட்சி செய்தியாளர்)

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் வாகனங்கள் அனுப்பப்பட்டு ஆஸ்பத்திரியில் காணப்பட்ட தளபாடங்கள், நோயாளர். கட்டில்கள் ஆகியன எடுத்துச்செல்லப்பட்டு கோப்பாய் ஆஸ்பத்திரியில் போடப்பட்டன. ஆனால், யுத்தம் ஏதுமற்ற இன்றைய காலகட்டத்தில் அவற்றினை ஏற்றிவந்து மீள ஒப்படைத்து ஆஸ்பத்திரியினை இயக்க எவரும் முன்வரவில்லை.



வட்டுக்கோட்டை இளைஞர் உடலுளவிருத்திச் சங்கம் நடத்திய புத்தாண்டு விழா நிகழ்வுகள் அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் திருக்குறள் மனனப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். வலி.மேற்குப் பிரதேச செயலர் செ.இரத்தினம், விரிவுரையாளர் திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (எ-5)

# உங்கள் சொற்படி...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொனி நிறுவனம் தனது இந்த ரோபோ நாய்களுக்கு வைத்துள்ள பெயர் 'அய்போ' என்பதாகும். அய்போவின் அபார விற்பனை வளர்ச்சியைப் பார்த்த சொனி நிறுவனம் அய்போவின் அடுத்த தலைமுறையையும் விரைவில் அறிமுகப்படுத்திவிட்டது. மிக அண்மையிலேயே அய்போவின் புதிய தலைமுறை விற்பனைக்கு விடப்பட்டது.

இந்த புதிய தலைமுறை அய்போ நாய்கள் அதன் முந்திய தலைமுறையை விட செயற்றிறன் கூடியவை.

முந்திய தலைமுறையைச் சேர்ந்தவை தமது எஜமானரின் கட்டளைப்படி செயற்படக் கூடியவை. எனினும் அவை தமது எஜமானரை இன்னார்தான் என்று அடையாளம் கண்டு கொள்ளமாட்டாதவை.

ஆனால், புதிய தலைமுறையைச் சேர்ந்தவை தனது எஜமானரின் முகத்தை நிமிர்ந்து பார்த்து அடையாளம் கண்டுகொள்ளக்கூடியவை. அதற்கு ஏற்ப அவை புரோகிராம் செய்யப்பட்டுள்ளன.

சமீபத்தில் இந்த அய்போ நாய் தொடர்பாக சொனி நிறுவனத்திற்கும் வேறொரு கணனி பொறியியலாளர் ஒருவருக்கும் இடையே சுவாரசியமான மோதல் ஏற்பட்டது.

அய்போ நாயின் செயல்திறனுக்கு அதன் அடிப்படை புரோகிராமே காரணம். இந்தப் புரோகிராமை சாதாரண மானவர்களால் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், கணனி வல்லுநர்கள் சிலர் அவற்றைக் கண்டுபிடிக்கக் கூடிய திறமைவாய்ந்தவர்கள்.

குறிப்பிட்ட அந்த கணனிப் பொறியியலாளரும் இத்தகைய ஒரு வல்லுநர்தான். அவர் எப்படியோ அய்போவின் செயற்றிறனுக்கு அடிப்படையாக அதன் மூளையில் இருந்த 'சிப்'பின் புரோகிராமை (இதனை Source code என்று சொல்லுவார்கள்) தெரிந்து கொண்டார். அது மட்டுமல்ல அந்த புரோகிராமில் சில மாறுதல்களைச் செய்து அய்போ நாய்களுக்கு சொனி நிறுவனம் செய்யக் கற்றுக் கொடுத்தவற்றைவிட அதிகம் செய்வதற்குத் தயார்ப்படுத்தினார். இதனால், அய்போ சொனி நிறுவனத்தின் புரோகிராமுக்கு மேலதிகமாகவும் செயற்பட்டது.

தனது கண்டுபிடிப்பை வைத்துக்கொண்டு அந்தக் கணனி நிபுணர் சும்மா இருந்திருந்தால் பரவாயில்லை தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று தனது கண்டுபிடிப்பை அவர் இணையத் தளத்திலும் போட்டு வைத்தார்.

உங்கள் அய்போ நாய்களின் Source code இப்படி இருக்கிறது. அதில் இன்ன இன்ன மாற்றங்களைச் செய்தால் உங்கள் நாய் இப்படி இப்படிச் செயற்படும் என்று விலாவாரியாக எல்லாவற்றையும் இணையத்தில் போட்டுவிட்டார். இதற்காக அவர் பணம் எதுவும் பெறவில்லை.

அய்போ நாய்களை வளர்த்தவர்கள் பலர் இவரது இணையத் தகவல்களைப் பார்த்து அதன்படி செய்ய அவர்களது நாய்களும் முன்னைக் காட்டிலும் செயற்றிறன்மிக்கவையாகின.

இதனைப் பார்த்த சொனி நிறுவனம் சும்மா இருக்குமா? அந்தக் கணனி நிபுணர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தது. உடனடியாக இணையத்தில் இருந்து அவரது புரோகிராம் தகவலை அகற்றும்படி பணித்தது. அவரும் அவ்வாறே செய்தார்.

ஆனால், அய்போ நாய்களை வளர்த்த பலருக்கு இது சீற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் சொனி நிறுவனம் மீது பாய்ந்தார்கள். இதனால், வேறு வழியின்றி அந்த கணனி நிபுணருடன் சமரசம் செய்துகொண்ட சொனி நிறுவனம் அவரது புரோகிராமை மீண்டும் இணையத்தில் வெளியிட அனுமதித்தது.

சொனி நிறுவனத்தின் புதிய தலைமுறை அய்போக்கள் தற்போது ஓரளவு பாடுகிறது. தன் எஜமானருக்கு குளிர்பானம் எடுத்துத் தருகிறது. சில சமயங்களில் தனது உணர்வுகளை வெளிப்படுத்துகிறது.

இதனை உருவாக்கிய கோஜி ககெயாமா (Koji kageyama) என்ற கணனிப் பொறியியலாளர் கூறுகிறார் - "மக்கள் இப்பொழுது அய்போவை உயிருள்ள நாய்கள் போன்றே நடத்துகிறார்கள். இதனை உருவாக்கிய போது அது இவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்று நான் கருதவில்லை" - என்று

சொனி நிறுவனம் மேலும் பல அய்போ வகை நாய்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. விரைவில் இப்போதுள்ளவற்றைவிட இன்னும் செயற்றிறன் கூடிய அய்போக்கள் வெளிவரும்.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1942 - 12 - 19

மறைவு 1992 - 06 - 11

## அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்

*(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)*

திதி: 2002-05-22

இத்தரையில் எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
நித்தமுமெம் நெஞ்சினிலே நிறைந்திருப்பீர் என்றும்
உத்தமரே! உம்மை இழந்ததனால் யாமிங்கு
பெருந்துயரங் கொண்டே வாடுகின்றோம் அப்பா!

*"தங்கத்தாமரை"*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.* (4012)

- மனைவி, பிள்ளைகள்.

# 8ஆம் நாள் நினைவஞ்சலி

இளவாலை புனித அன்னாள் சனசமூக நிலையம்
மற்றும் பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கத்தின் தலைவர்
திரு. அ. யோ. சவுந்தரநாயகம் (சந்திரன்)
அவர்களின் அன்புத் தந்தையார்

## வெலிச்சோர்ப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புனித அன்னாள் சனசமூக நிலையம்,
*இளவாலை.* (C/22219) பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி *ப. அனுஷாநந்தேவி*
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி விஜயலக்ஷ்மி பரராஜசேகரம்** அவர்களின்

திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம். (C-22220)
H.N.D.A 4ஆம் வருட பகுதி நேர மாணவர்கள்.

## யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்ற அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

அதிர்ஷ்ட இலக்கங்கள் முதலாம் பரிசு இல. - 4920
2ஆம் பரிசு இல. - 6363
3ஆம் பரிசு இல. - 3582

ஆறுதல் பரிசுக்கான இலக்கங்கள் 5909, 0733, 5233, 3091, 2393

இப்பரிசுப் பொருள்களை உரிய சீட்டைக்காட்டி கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும். (4013)

# தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள (தங்குமிடம்) லொட்ஜ்க்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

- கணக்காளர் ~ வயது 18 - 25 (ஆண்)
- இரவுக் காவலாளி ~ வயது 45 - 55 (ஆண்)
- அலுவலக உதவியாளர் ~ வயது 16 - 22 (ஆண்)
- ஆண்களின் ஆடைகள் தைக்கப் பழகும் ஒருவர் ~ வயது 16 - 20 (ஆண்)

விண்ணப்ப முடிவு திகதி: 31-05-2002
விளம்பர இல.1524 C/O உதயன், யாழ்ப்பாணம். (3995)

## கல்விப் பணிப்பாளர்கள் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்.மே22

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணி மனையில் நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கி.சிவராஜா அறிவித்துள்ளார். (க-8)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே22

யாழ்பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிககு கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

பொருளியல்துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கல் யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் பீடாதிபதி இ.நந்தகுமார் "திறந்த பொருளாதாரத்தில் நெருக்கடிகள்" என்ற தலைப்பில் கருத்துரை நிகழ்த்தவுள்ளார். (ஓ-12)

## விளையாட்டு நிகழ்வு

வலி.வடக்கு,மே22

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் அமரர் தம்பிராசா ஞாபகார்த்த சுற்றுக்கேடயத்துக்காக நடத்தப்படும் லீக் முறையிலான - உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.கவும் மல்லாகம் ஸ்ரீமுருகன் வி.கவும் பங்குபற்றுகின்றன. (ஜ-81)

## உடன் சந்திக்கவும்

17.05.2002 வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் கண்டெடுக்கப்பட்ட கைச்சங்கிலியைப் பெற்றுக்கொணடவர், ஓ.பி.டி. சிரேஷ்ட வைத்திய அதிகாரியை உடன் சந்திக்கவும்.

உ.வசந்தி,
சா/தொழிலாளி,
யாழ்.போதனா வைத்தியசாலை. (4019)


ராஜா யாழ்ப்பாணம்

6ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த

தமிழன்

தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.) (C/22146)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
LEONARD DIC APRIO
KATE WINSLET

டைட்டானிக்
(தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C-22147)

நாகம்ஸ் சுன்னாகம்

சில தினங்களுக்கு மட்டும்
சரத்குமார், அபிராமி, முரளி, மனோஜ் நடித்த

சமுத்திரம்
(சீஸ்ஸ)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்) (4007)


# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 - 11 - 1954

உதிர்வு 18 - 05 - 1997

## அமரர் செல்லத்துரை மனோரஞ்சன் (ரஞ்சன்)

திதி:22.05.2002

வஞ்சமில்லா அன்பினொடு யாவரையும் மதித்தீர்
நெஞ்சமதில் கனவொடு நாளும் உழைத்தீர்
பூஞ்சிறகு விரித்துமது உயிர் பிரிந்தென்ன
வஞ்சமுள்ள மாண்புறவே உமைப்பிரிந்து ஆண்டுகள்
ஐந்து சென்றிடினும் ஆறாது எம்துயரம்!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:*

பெற்றோர், மனைவி,
பிள்ளைகள்: மலவேந்தன், ஜெகதா, இராகவன், பிரசானந்தன்.

*சங்குவேலி தெற்கு, மானிப்பாய்* (4002)

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியரான
**திரு. ம. ஜோ. பெனில்டஸ் (ஜோன்சன்)** அவர்களின் மாமனார்

## கந்தவனம் கணேசு

அவர்கள் காலமானதையிட்டு நாம் துயருறுவதுடன் அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயர் பகிர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்,
*யாழ். மத்திய கல்லூரி.* (4008)

# துயர் பகிர்கின்றோம்

எமது சக இரண்டாம் வருட மாணவி
**பவதாரணி** அவர்களின் அன்புத் தந்தையார்

## வை. கந்தையா

அவர்கள் 21-05-2002 திங்கட்கிழமை காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

*2ஆம் வருட வணிகத்துறை மாணவர்கள்,*
முகாமை கற்கைகள் வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (4017)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி காமாட்சிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

தனங்களப்பைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சிப்பிள்ளை தம்பிப்பிள்ளை நேற்று (21.05.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விதானையார் விசாகப்பெருமாள் தம்பதிகளின் மூத்தமகளும் காலஞ்சென்ற விசுவலிங்கம் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கந்தசாமி (தலைவர், அ.ம.ப.நோ.கூ. சங்கம்), ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), ஜெயமனோகரி (கனடா) ஆகியோரின் தாயாரும் ராஜராஜேஸ்வரி, ஜெயந்தி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் மங்கையர்க்கரசி (கனடா), சதானந்தன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2002) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.கந்தசாமி (மகன்)
*(தலைவர், அ.ம.ப.நோ.கூ.சங்கம்)*

*"ராஜவில்லா" மல்லாகம்.* (4000)

## திருமதி சிறீஸ்கந்தராஜா அருந்ததிபுஸ்பம்

கொல்லங்கலட்டி, செந்தாவத்தையைச் சேர்ந்த திருமதி சிறீஸ்கந்தராஜா அருந்ததிபுஸ்பம் 18.05.2002 (சனிக்கிழமை) அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் சிறீஸ்கந்தராஜாவின் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S.) அன்பு மனைவியும் சின்னத்துரை - கமலேஸ்வரியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கச்சியின் மருமகளும், புஸ்பராணி (சுன்னாகம்), புஸ்பரூபி (சிவனார் அரசினர் த.க.பாடசாலை), புஸ்பாகரன் (பிரதேச செயலகம், கிளிநொச்சி), பாஸ்கரன் (லண்டன்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாதேவன், கணேஸ்வரி, சிறீதரன், கணேசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.05.2002 (சிவன் வீதி, உருத்திரபுரம், 10ஆம் வாய்க்கால்)இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சிறீஸ்கந்தராஜா
(கணவர்)

*கிளிநொச்சி.* (3997)

## யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலய வாழ்நாள் அதிபர்

உயர்திரு.அ.திருநாவுக்கரசு

### அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழா



*காலம்:* 2002.05.23 வியாழக்கிழமை பிற்பகல் 1.00
*இடம்:* வித்தியாலய மண்டபம்
*தலைவர்:* திருமதி தெ.துரைச்சாமி அவர்கள் (அதிபர்)

கல்லூரி வளர்ச்சியைத் தன் கண்ணாகக் கொண்டு
கருத்துடன் கருமம் செய் திருநாவுக்கரசருக்கு
பொன்னான இந்நாளில் பொன்னோடு புகழ்மாலை
பூமாலை பாமாலை பொன்னாடை போர்த்தி பூசிப்போம்
சகல நலமும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்
*ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*- அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்.*

யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்,
கொடிகாமம். (4011)

## கோப்பாயில் விடுதலைப் புலிகளின் பொதுக்கூட்டம்

சமகால அரசியல் நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கும் பொதுக் கூட்டம் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மைதானத்தில் இன்று புதன்கிழமை மாலை 6மணி முதல் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பணிக்குழுவினர் இந்தக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர். (ஐ-72)

## தொகை மதிப்பீட்டு கருத்தரங்கு வவுனியாவில்

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களைச் சேர்ந்த திட்டமிடல் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு தொகை மதிப்பீட்டுக் கருத்தரங்கு நாளை மறுதினம் வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றச் செல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வரதராஜாவை இன்று முற்பகல் 11 மணிக்குச் சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுவாங்கேணியைச் சேர்ந்தவர்களான யோகராசா பிரபு (வயது18), இராசையா ஜெயக்குமார் (வயது28), எஸ்.கருணாகரன் (வயது25) ஆகியோரே கரைதிரும்பவில்லை.

சனிக்கிழமை இரவு பிளாஸ்டிக் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற இவர்கள், மறுநாள் கரைதிரும்பாததை அடுத்து அவர்களை சக மீனவர்கள் தேடிவருகின்றனர். நேற்றுவரை அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ஐ.தே.கட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடை, கட்டுநாயக்கா-சீதுவ ஆகிய நகரசபைகள், திரப்பனை, ஹாலி-எல, புத்தள, இரத்தினபுரி, மிகிந்தலை, மொனராகலை, களுத்துறை, கெஸ்பாவ, அம்பகமுவ ஆகிய பிரதேச சபைகள் என்பனவே ஐ.தே.க. வசமாகின.

இரத்தினபுரி மாநகரசபையை லிபரல் கட்சி கைப்பற்றிக்கொண்டது. நாத்தாண்டிய பிரதேச சபையை சுயேச்சைக் குழு கைப்பற்றிக்கொண்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) ஓர் உள்ளூராட்சி மன்றத்தையேனும் கைப்பற்றவில்லை.

நாத்தாண்டியாவிலும் இரத்தினபுரி மாநகரத்திலும் ஐ.தே.க. வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் அக்கட்சி சுயேச்சைக் குழுவுக்கும் லிபரல் கட்சிக்கும் ஆதரவு வழங்கியது.

கொழும்பு மாநகர சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 இடங்களையும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் 3 இடங்களையும் பெற்றுக்கொண்டன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு முதல் கட்டமாகக் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் பெற்ற அமோக ஆதரவு ஆளும் ஐ.தே.கட்சிக்குத் தொடர்ந்து இருந்து வருவதை இந்த இரண்டாம் கட்டத் தேர்தல் முடிவுகளும் எடுத்துக்காட்டியிருக்கின்றன.

லிபரல் கட்சி உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் அதிகாரத்தைக் கைப்பற்றியது இலங்கை உள்ளூராட்சி மன்ற வரலாற்றில் இதுவே முதற்றடவையாகும்.

அவ்வாறே புதிய இடதுசாரி முன்னணியும் முதற்றடவையாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவரைப் பெற்றிருக்கிறது. இரத்தினபுரி பிரதேச சபையில் அக்கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்திருக்கிறது. (ஐ-3-12)

## இயல்புநிலையை உருவாக்குவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் வரவேற்றனர்.

கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப்பணியகத்தில் காலை 9.45மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாகின.

செயலணியின் செயலர் பேர்ணாட் குணதிலக, அவரது செயலாளர் அபதுல் அஸீர், செயலணி உறுப்பினர் எட்வேட் ரூபசிங்க, நோர்வே பிரதித் தூதர் தோமஸ் பிராங்லண்ட் ஆகியோர் நேற்றைய பேச்சில் கலந்துகொண்டனர்.

புலிகள் தரப்பில் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி மற்றும் தொல்காப்பியன், ஜோர்ச் ஆகியோர் பங்குபற்றினர்.

ஏ-9 கண்டி வீதியை 24 மணிநேரமும் மக்கள் போக்குவரத்துக்கு அனுமதித்தல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அந்த வீதியைப் புனரமைத்தல், தீவகத்தில் விடுதலைப் புலிகள் அரசியல்பணிகளை ஆரம்பித்தல், பாடசாலைகள், கோயில்கள மற்றும் பொது இடங்களில் இருந்து படையினரை வெளியேற்றல் போன்ற விவகாரங்கள் குறித்து இந்தப் பேச்சுக்களின்போது ஆராயப்பட்டது.

மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவிப்பதற்கான செயற்பாடுகள் குறித்தே முக்கியமாகப் பேசப்பட்டது என்று புலிகள் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பல விடயங்கள் ஆராயப்பட்டபோதும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று செயலணியின் செயலாளர் பேர்னாட் குணதிலக தெரிவித்தார்.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் அரசுத்தரப்புக்குழு ஒன்று விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருப்பது இதுவே முதற்றடவையாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையைச் சீராக நடைமுறைப்படுத்துவதில் அரசுத்தரப்பு போதிய ஆர்வம்காட்டவில்லை என்று அதிருப்தி தெரிவித்து புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கடந்த சில தினங்களாகக் கருத்துக்களை வெளியிட்டுவந்தனர்.

அரசின் நடவடிக்கைகள், யுத்த நிறுத்த மீறல்கள் என்பவற்றால் சமாதான முயற்சிகள் ஒருவித மந்த நிலைக்கு உட்பட்டிருப்பதாகப் புலிகள் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே அரசின் சமாதான செயலணிக் குழு புலிகள் பிரதேசத்துக்கு திடீரெனச் சென்று பேச்சு நடத்தியிருக்கிறது.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் தொய்வு நிலையை அகற்றும் முயற்சியாகவே அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (ஐ-3-12)

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு லீற்றர் மண்எண்ணெய்யின் விலை ஒரு ரூபா 50சதத்தினாலும் அதிகரிக்கப்படுகிறது.

ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 54ரூபா.

ரூபாவின் பெறுமதி மதிப்பிறக்கம் செய்யப்பட்டிருப்பதனால் இந்த விலை அதிகரிப்புச் செய்யப்படுவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் கூறுகிறது. (ஐ-9-12)

## பிரபாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்க கடந்த 1999ஆம் ஆண்டு இவர்கள் மாநில அரசிடம் முறைப்படி விண்ணப்பித்து அனுமதி பெற்றுள்ளனர்.

பிரபாகரனின் பெற்றோர் என்ற வகையில் இவர்கள் எந்தவிதமான விவகாரங்களிலும் சிக்கியதில்லை. மிக அமைதியான முறையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் தற்போது யாழ்ப்பாணம் திரும்புவதற்கு விரும்பி திருச்சி காவல் துறை தலைமையகத்தை நாடியுள்ளனர். இவர்களைப் போலவே திருச்சி மற்றும் சுற்றுப் பகுதிகளில் வசித்து வரும் மேலும் பல இலங்கைத் தமிழர்களும் நாடுதிரும்ப ஆர்வம் காட்டி வருகின்றனர்.

- இவ்வாறு அந்த இணையச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


NEW SCIENCE COLLEGE
JAFFNA
பௌதிகவியல்
By:-M.KARUNANITHY
2004 A/L
அலைகளும் அதிர்வுகளும்
Wed. - 4.15 - 5.15
Fri. - 4.15 - 5.15
ஆரம்பம்: 24/05/2002
2003 A/L
புலங்கள்
Sat, Sun-4.00-5.00
ஆரம்பம்: 25/05/2002 (4020)

O-REX
பல்கட்டுமிடம்
பரமேஸ்வரார் சந்தி - யாழ்ப்பாணம்
I. பல் கட்டுதல்
II. மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடுதல்
III. உடைந்த பற்களை ஒட்டி சீர்செய்தல்
IV. பற்களைச் சுத்தம் செய்தல்
V/ நீண்டு காணப்படும் பற்களைக் குறைத்தல் - Dr.இளங்கோ

OXFORD INSTITUTE
K.K.S.Road,Chunnakam
SPOKEN ENGLISH
AND
GRAMMAR
Mr.BRITTO
புதிய வகுப்பு ஆரம்பம்: 26.05.2002
சனி, ஞாயிறு
காலை 8 - 9 am (புதிய நேரம்) (3908)

சயன்ஸ் சென்றர்
நெல்லியடி.
எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு
ஆரம்பம்: 22.05.2002
(புதன் 4.30 p.m.)
ஆசிரியர்:
திரு.தவசேகர் (3982)
Note: வாரத்தில் இரண்டு நாள்கள் நடைபெறும்.

நாளை ஆரம்பம்!
SUBRA(14)
சித்தன்கேணி
English
Spoken with Grammar
By:-Britto
ஆரம்பம்:நாளை 23.05.2002
வியாழன் காலை 7.00 மணி
பேச்சு சிங்களம்
By:லீலாகிருஷ்ணன்
ஆரம்பம்:நாளை 23.05.2002
வியாழன் காலை 8.00 மணி
(C-22173)

துரித சேவை
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் சகலவிதமான பொதிகளையும் துரித கதியில் அனுப்பிவைக்க இன்றே நாடுங்கள்:
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
167, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/22209)


உ
ஸ்ரீ ராமஜெயம்

## நீங்காத நினைவலைகள்

**10ஆம் மாத நினைவஞ்சலி 31ஆம் நாள் நினைவஞ்சலி**

**22-05-2002**

மண்ணில்: 04 - 06 - 1937



விண்ணில்: 24 - 08 - 2001

மண்ணில்: 12 - 06 - 1944



விண்ணில்: 22 - 04 - 2002

**அமரர் முருகேசு சுப்பிரமணியம் திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்தீர்கள்!

ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்!

நீங்கள் இருவரும் கொடிய நோயுற்றிருக்கும்போது எனக்கு வந்த உறவால் உங்களுக்கு ஆறுதலும் உதவிகளும் கிடைக்கும் என எண்ணினீர்கள். ஆனால் அந்த உறவு உங்களை உதறித்தள்ளி விட்டுப்போனதல்லவா! நீங்கள் பெற்றெடுத்த ஒரேயொரு செல்வத்தையும் இப்பாரினில் தன்னந்தனியே விட்டுவிட்டு இருவரும் சென்றீர்களே!

எனது அன்புத் தாயார் யாழ். போதனா வைத்தியசாலையில் 1997ஆம் ஆண்டு தொடக்கம் 22.04.2002 வரை நோயுற்றிருக்கும்போது மருத்துவ உதவிகள் புரிந்த பணிப்பாளர் அவர்களுக்கும் 23ஆம் இலக்க வார்ட்டில் பணிபுரிந்த வைத்திய நிபுணர்களுக்கும் வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது அன்புப் பெற்றோரின் ஆத்மா சாந்தியடைய கிருஸ்ண பரமாத்மாவை என்றென்றும் வேண்டுகின்றேன்.

ஸ்ரீராமஜெயம்.
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
உங்கள் அன்பு மகன்
**சு.இரவீந்திரராசா (ரவி)** (ஊர்காவற்றுறை பிரதேசசபை)

கலையரசு வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (3975)


கொழும்பு செல்லும் பயணிகளுக்கு!
ஆர்.பி(B) பஸ் ஆசனப் பதிவகம், யாழ்ப்பாணம்.
கொழும்பு செல்கின்ற பிரயாணிகளின் நன்மை, வசதி கருதி இன்று (22.05.2002) புதன்கிழமையிலிருந்து எதுவித தடங்கல்களோ தாமதமோ இன்றி நேரடியாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
குறிப்பிட்ட வாகனங்கள் மட்டுமே சேவையில் ஈடுபடவிருப்பதால் உங்களது ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.
புறப்படும் நேரம்: காலை 5.00மணி (புதிய நேரம்)
கிளைநிறுவனம்:
வைரவர் கோயிலடி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம். (4018)
வி.இராஜரட்ணம் (செல்வம்)
ஆர்.பி.புக்கிங் சென்ரர்,
15, கிறான்ட் பஜார், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இலச்சுமி

உசனை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி இலச்சுமி நேற்று (21.05.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், பராசக்தி, நீலாம்பிகை, ரங்கநாதன், கமலாம்பிகை, மீனாம்பிகை, வேற்கரன் இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.05.2002) புதன்கிழமை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சன்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து.சொரூபன்
(பேரன்)

உசன் மிருசுவில். (4023)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.